
# விலக்ஷணானந்த போதம்



சுத்தாத்வைதி அருட்கவி
விலக்ஷணானந்த ஸ்வாமிகள்

இரண்டாம் பதிப்பு : 1918
மூன்றாம் பதிப்பு : டிசம்பர், 2008

ரூ. 45/-

ஒளியச்சு & அச்சிட்டோர்
**பரணி கிராஃபிக்ஸ்**
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
தொலைபேசி : 2813 1102

ஓம்

## முகவுரை

**ஓம் தத் ஸத்.**

அநாதியான மாயையென்னு மாதாவினிடத்தினின்றும் ஏக காலத்தில் வெளி வந்த ஆத்ம சகோதரர்களே நாம் இந்த அரிய மானிட சரீரத்தைப் பெற்றதனாலாகும் பயன் நித்திய பரமானந்த சொரூப சாக்ஷாத்காரத்தை யடைதலாம். இஃதே சர்வ வேதாந்த சாஸ்திர சாராசங்கிரகமும் மஹாரிஷிகளினபிப்பிராயமுமாம். ஆதலால் அத்தகைய பரம மோக்ஷத்தையடைய முயலுபவர்களுக்குச் சாதகமாக எளிய நடையில் குரு சிஷ்ய வினா விடை ரூபமாகச் செய்யப்பட்ட இந்நூலுக்கு விலக்ஷணானந்த போதம் என பெயரிடப்பட்டிருக்கிறது.

### இந்நூலினுட்கிடையாவன

அஞ்ஞான வசப்பட்ட ஒருவன் காமிய கருமஞ் செய்ததும் பின் நிஷ்காம கரும உபாசனத்தால் மல விக்ஷேப தோஷங்கள் நிவிரித்தியானதும் மீதியிருந்த ஆவரண தோஷம் நீங்கும் பொருட்டுச் சற்குருவைத் தேடிப் பதரீநாராயண மென்னுந் தபோவனத்திற் கண்டதும் அன்னவரை வணங்கித் தன் குறை யிரந்து தோத்திரஞ் செய்ததும் ஆசாரியர் சிஷ்யனது சந்தேக நிவிர்த்தியின் பொருட்டு ஜீவகாருண்யம் அதன் லக்ஷணம் சர்வ ஜீவ சமத்துவம் ஜீவ காருண்ய அனுஷ்டிப்பு அதன் விவரங்கள் அதன் பிரயோஜனங்கள், ஜீவ காருண்ய சரித்திரம் இவற்றிற்குப் பிரமாணங்கள்.

**கரும யோகம்**

கரும லக்ஷணம். யோக லக்ஷணம். இரண்டின் ஒற்றுமை லக்ஷணம். கரும பேதங்கள். அதன் லக்ஷணங்கள். காமிய கரும

லக்ஷணம். அதன் அனுஷ்டிப்பு அதன் பயன் நிஷ்காம கருமம். அதன் லக்ஷணம். அதன் அனுஷ்டிப்பு. அதன் பேதங்கள். அதற்குப் பிரமாணங்கள். முமுக்ஷுக்கள் செய்ய வேண்டிய கருமங்கள். கருமத்தில் அத்வைதிகளபிப்பிராயம் விசிட்டாத்து வைதிகளப்பிராயம். இருவரபிப்பிராயமும் ஒப்பல் கருமம் அநாதி கருமம் நாசமாகும் வழி நாசமானதின் பயன்.

**இராஜ யோகம்**

இராஜ யோக லக்ஷணம், அதன் பதினைந்தங்கங்கள், அதன் லக்ஷணங்கள், சவிகற்ப நிருவிகற்ப சமாதி லக்ஷணங்கள், சமாதிக்குத் தடை ஒன்பது விதங்கள் அவைகளின் லக்ஷணங்கள் அவை ஒன்பதும் லயம், விக்ஷேபம், கஷாயம், ரஜாஸ்வாதம் என்னும் நான்கினுள் அடக்கமென்றும், அதன் லக்ஷணங்களும் அவற்றை நிவர்த்திக்கு முபாயங்களும், அந்தக்கரணத்தின் ஸ்திதிகள், அதன் நிலைகள் அதற்குப் பிரமாணங்கள் இராஜயோகத்தின் பிரயோஜனம்.

**அஞ்ஞானம்**

அஞ்ஞான லக்ஷணம். அதன் பிரிவுகள். பிரிவுகளின் லக்ஷணங்கள். அதன் பேதமான நாமங்கள். அஞ்ஞான காரிய பிரபஞ்ச லக்ஷணம். அனாதி லக்ஷணம். அத்வைதத்தில் ஆறு அனாதியென்னல் அதன் திருஷ்டாந்த தாஷ்டாந்தங்கள். அவித்தியாநிவிர்த்தி. ஆத்ம ஞானப் பிராப்தி அஞ்ஞானம் நீங்கும் காலம். ஞானமுதயமாகுங் காலம். இதன் பிரமாணங்கள். அதன் சங்கை சமாதானங்கள் பிரபஞ்ச காரணம். பிரமமே உலக சிருஷ்டிக்குக் காரணம். இதற்குச் சுருதிப் பிரமாணம். நித்திய அநித்திய லக்ஷணங்கள், அதற்குப் பிரமாணம் திருஷ்டாந்த தாஷ்டாந்தங்கள்.



**மஹா வாக்கியம்**

மஹா வாக்கிய லக்ஷணம். நான்கு மஹா வாக்கியங்களி னுற்பத்தி, உபநிடதங்கள். அதனனுஷ்டிப்பு. அதன் பிரயோஜனம். உபதேச மஹா வாக்கியத்திற்கு அத்வைத தாத்பரியம். மஹா வாக்கிய அனுஷ்டானக் கிரமம் மஹா வாக்கிய விசாரணை, துவம்பதசோதனம். பஞ்ச கோசங்களினிவர்த்தி. பஞ்ச கோசங்களு மாத்மாவல்ல என்பதற்கு அநேக சுருதி யுக்தி அனுபவப் பிரமாணங்கள். சூனியாகாசமும் ஆத்மாவல்லவென்பதும். அனுபவப் பிரமாணமும், ஜீவ தரிசனம். கூடஸ்த தரிசனம். தத்பதசோதனம். சுபானுபவ லக்ஷணம். ஞானத்துக்குச் சாக்ஷாத் சாதனம். பரம்பரா சாதனம். அதன் பிரமாணங்கள், அனாத்ம பிரிவுகள். உபதேச மஹா வாக்கியத்திற்கு விசிட்டாத்துவிதிகள் அபிப்பிராயம். விசிட்டாத்விதக் கொள்கை, அதன் விபரமான லக்ஷணம், தத்துவத்திரய லக்ஷணம், அதன் பாகுபாடுகள். விசிட்டாத்துவித அனுஷ்டானத்திற்குச் சாதனமான ஏழு வித நாமங்கள், அதன் லக்ஷணங்கள். கைவல்ய மோக்ஷம், பிரமானந்த மோக்ஷம் என இரு வகை மோக்ஷங்களின் சொரூபம். விசிட்டாத்து வித முடிபு, அதன் சங்கை. சமாதானங்கள், துவைதம், துவைத சித்தாந்தம், அவற்றின் லக்ஷணங்கள். விஷ்ணுவே பிரஹ்மம். உபதேச மஹா வாக்கியத்திற்குத் துவைதிகளபிப்பிராயம், அதன் சங்கை, சமாதானங்கள், துவைதிகளின் முடிபு.

**குரு லக்ஷணம்**

ஆசாரியர்கள் சன்னியாசிகளா? கிரகஸ்தர்களா? குரு லக்ஷணம். அதற்குச் சுருதி யுக்தி அனுபவப் பிரமாணங்கள், ஈஸ்வர தரிசன பலன். குரு தரிசனப் பலன். ஈஸ்வர தரிசனத்திலும் குரு தரிசனமே மேன்மையெனல், அந்த விஷயங்களுக்குப் பிரமாணங்கள்.

**சிஷ்ய லக்ஷணம்**

சிஷ்ய லக்ஷணங்கள். சிஷ்யன் குருவை யடையுங்கிரமம். அடைந்தபின் செய்ய வேண்டியவைகள். இதற்குச் சுருதிப் பிரமாணங்கள், திரவியம், சரீரம், மனம், வாக்கு. இவற்றின் அர்ப்பணக் கிரமங்கள், அவற்றின் லக்ஷணங்கள், குருபாவனா லக்ஷணங்கள், அவற்றின் விபரங்கள், குருவினிடத்து அனுஷ்டிக்க வேண்டிய ஒன்பதுவித பக்திகள், அவற்றின் விரிவுகள், சிஷ்யர்கள் குரு சன்னிதானத்துக்குப் போகும்போது நீக்கத் தக்கவைகள், பரமான்ம சொரூபம்.

**ஹட யோகம்**

ஹட யோகம் எட்டு விதமெனல், அவற்றின் சொரூபங்கள், அவற்றின் பிரிவுகள், பிரிவுகளின் லக்ஷணங்கள், பிராணாயாம லக்ஷணம், அதன் அனுஷ்டானக் கிரமங்கள், ஆகார நியமனம், சுவாசத்தை நாடிகளில் மாற்றும் விதங்கள், அஷ்டமா சித்தி, அதன் லக்ஷணங்கள், சித்திகளி லிச்சையுடையோர்க்குத் தத்துவ ஞானமுண்டாகாதெனல், இவற்றிற்குச் சுருதிப் பிரமாணம், ஹட யோகப் பயன்.

**மனம்**

மனதின் லக்ஷணம், இதற்குப் பிரமாணம், ஜன்ம நாசவுபாயம் இதற்குப் பிரமாணம், மனோ நாசவுபாயம், மனத்தின் உற்பத்தி ஸ்தானம், மனதால் எல்லாஞ் செய்யலாம், மனதை யடக்குங் கிரமங்கள், மனமடக்குமதிகாரி, ஆத்ம லக்ஷணம், மனோநாசஞ் செய்பவர்களனுஷ்டிக்க வேண்டிய விதிகள், மனதின் உண்மையான சொரூபம், சித்தி மார்க்கம், முத்தி மார்க்கம் ஆத்ம விசாரம், மனதின் முடிவு.



**பிரமசரியம்**

பிரமசரிய லக்ஷணம், எட்டுவித மைதுனங்கள், அதன் லக்ஷணங்கள், அதன் பயன் முடிவு.

**மாதர்கள்**

ஸ்திரீகளுக்கு ஆத்ம ஞானத்திலதிகார முண்டெனல், இதற்குச் சுருதி யுக்தி அனுபவப் பிரமாணங்கள் மாதர்களுக்கு சந்நியாசத்தி லதிகாரமுண்டெனல், பாகிய ஆந்தர சந்நியாச லக்ஷணங்கள், ஸ்திரீகளுக்கு ஆத்ம ஞானம், சந்நியாசம் இவைகளில் அவசியம் அதிகாரமுண்டெனல், இதற்கு முன் பிரமாணங்கள்.

**முக்கிய வினா விடைகள்**

தத்துவ ஞானத்துக்குச் சாதகமான முக்கிய வினாக்களும் விடைகளும், குரு சிஷ்ய சம்வாதம், முற்றுப் பெறல். சிஷ்யனை அனுபவமடைவிக்க வேண்டி அனாத்மாவைப் பிரித்து ஆத்ம பிராப்தியை யரிவித்து நிருவிகற்ப சமாதியிலமர்த்தல், சிஷ்யன் சமாதி யிலமர்ந்திருத்தல் நூல் முடிவு பெறல்.

## இந்நூலியற்றுங் காரணம்

பாண்டி வள நாட்டின் பேர்பான் மகுத்துவம் பொருந்திய தேவார நகரமொன்றிருக்கிறது. அந்நகரிற்றோன்றி ஞானாசாரிய ராய் உலகத்திலுள்ள மாக்களுய்யுமாறு கருணை பூண்டு எம்மனோர்களை ஆட்கொள்வான் எமது குருநாதனாகிய ஸ்ரீ சுத்த அத்வைதி அருட்கவி விலக்ஷணானந்த ஸ்வாமிகள் எம்மனோர்களான முமுக்ஷுகளின் வேண்டுகோளால் இந்நூலை அருளிச் செய்துள்ளார்.

இந்நூலிற்கு "விலக்ஷணானந்த போதமென்று" பெயரிடக் காரணம் **விலக்ஷண** = மேன்மையான, அதாவது சர்வ திரிசியங்களுக்கு மேலாயுள்ள பிரஹ்ம சொருபத்தை நிருவிகற்ப அத்வைத சாக்ஷாத்கார வாயிலாக அறிவிக்கும்.

**போதம்** = உண்மையான தத்துவ ஞான சாஸ்திரமாயிருப்பதினால் இந்நாமமிடப்பட்டது.

-: ஓம் தத் சத் :-

இங்ஙன்,

**ஓர் சாது**



ஓம்

# குரு ஸ்தோத்திரம்

சோதிமேனிதுலக்கிய சுந்தர
 னோதி நால்வருக் குள்ளதுமுற்றிட
நீதிசெய்முறை நித்தியநாதனா
 மாதியந்தண னாரடியாள்குவாம்.

பராமுகத்தவராகிடப் பார்மிசை
 நிராகுலத்தனி நிச்சயவத்துவாற்
றாதலத்தினி னல்லருடந்திடு
 மிராமகிருஷ்ண னியலடியெண்ணுவாம்.

அத்தியான்மீகாமாதி யடைந்தவரதுவேயாக
பத்தியானிமலமான படிவரையிசைப்பமிக்க
சித்தலமிசையேயின்று மினிமையாங்குருவாமென்ற
நித்தியானந்தன்பாதம் நிலமிசை நிகழ்த்துவாமே.

## நூல்

ஓம். சத்தாமாத்திரமாயும், தற்பதலக்ஷியார்த்தமாயும் ஓங்கார சொரூபமாயுமிராநின்ற, பிரஹ்ம வஸ்துவைத் தவிர அன்னிய மில்லாத பிரபஞ்சத்தை அன்னியமாக எண்ணி பிரபஞ்ச விடயவாதனாவசமடைந்து நின்ற ஒருவன் புத்திரன், செல்வம், மனைவி, மனை, கல்வி, சரீர சௌக்கியம் முதலிய காமிய பலன்களை இச்சித்துப் பற்பல புண்ணிய கருமங்களைச் செய்து வந்தனன். இவன் இவ்விதமாகக் காமிய பலன்களைச் செய்து கொண்டு வருங்காலத்தில் பூர்வ புண்ணிய வசத்தால் சில சாது ஜனங்களெதிர்ப்பட்டு, "அப்பா! நீ செய்து வரக்கூடிய காமிய கருமங்களால் வராநின்ற பிரயோஜனங்களெல்லாம் அழிந்து போகக் கூடியதாயிருப்பதால் இன்று முதல் காமிய கருமங்களை

விட்டொழித்துக் காமியமல்லாத நிஷ்காம கருமங்களை
செய்து வருவாய்" என்று அதன் கிரமங்களை விஸ்தாரமாக
வெளிப்படையாகவும் சொல்லிப் போயினர்கள். இவன் அ
சனங்கள் கூறியபடியே முறையுடன் நிஷ்காமகருமங்க
செய்து வந்தனன். இப்படி இவன் நெடுங்காலம் நேயத்து
செய்து வந்ததனால் அந்தக்கரணத்திலுள்ள மலம், விட்சே
ஆவரணம் மூன்று தோஷங்களில் மலதோஷம் நிவிர்த்தி
விட்டது. பின்பு ஓர் ஆசாரியரிடம் சகுணத் தியானம், ஈஸ்
நாமோச் சாரணம் உபாசனாக் கிரமங்களைச் செவ்வையா
தெரிந்து கொண்டு நெடுநாள் அப்பியாசித்து வந்தனன். அதன
விட்சேபதோஷமும் நிவிர்த்தியாகி விட்டது. இதற்குள் அ
வேதாந்த நூல்களைச் சிரவணஞ் செய்து அதன் தாத்பரியங்கள
செவ்வையாத் தெரிந்தபின் நித்தியா நித்திய வஸ்து விவே
இகமுத்திரார்த்த பரபோக விராகம், சமாதி சட்கசம், பத்
முமுக்ஷுத்வம் என்னும் நான்கு சாதனங்களையுமடை
ஆவரண தோஷ மாத்திரம் மிஞ்சியிருந்தது. இவ்விதம
பக்குவமடைந்த இவன் ஆவரண தோஷத்தையும் நிவிர்த்தித்
சச்சிதானந்த லக்ஷண பிரஹ்ம சொரூபத்தை அபரோக்ஷம
அரிய வேண்டுமென்னும் தீவிரமான இச்சையுடன் ஜீ
பிரஹ்ம ஐக்கியத்தைப் போதிக்கும் ஸ்ரீ பரம சற்குருவை
தேடிக் கடைசியாய் இமயகிரிச் சாரலிலுள்ள பதரீ நாராய
மென்னும் தபோவனத்தில் மகத்தான ஞான லக்ஷணங்களோ
கூடிய ஓர் சந்நியாசி அநேக சிஷ்யர்களுடன் இருக்
கண்டான். கண்டவுடன் இவரே நம்மை ஆட்கொள்ள வ
அருமையான ஆசாரியராகுமென்று நிச்சயித்து அவருடை
பாதார விந்தங்களில் பத்திர, புஷ்ப பலாதிகளைக் கொண்
அர்ச்சித்துச் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து எழுந்து நின்
அஞ்சலியஸ்தனாய், "அடியேனை ஆளவந்த பகவானே
என்னுடைய அந்தக்கரணத்திலுள்ள ஆவரண தோஷத்



நிவிர்த்தியாகும்படி செய்து அடியேனையும் தேவரீரைப் போலாக்கி அநுக்கிரகிக்க வேண்டும்" என்றிரங்கி விண்ணப்பஞ் செய்ய, அச்சற்குரு மனத்திற் கருணை பூண்டு, "மைந்தா! உன்னுடைய அந்தக்கரணத்திலுள்ள சந்தேகங்களெல்லா வற்றையுங் கேட்டுத் தெளிந்து கொண்டபின் உன் மனதை நிருவிகற்பத்திலமர்த்தி உன் கோரிக்கையை முடிக்கலாம்" என்றருளிச் செய்யச் சீடன் வினவத் தொடங்கினான்.

-: ஓம் தத் சத் :-

ஓம்

# ஜீவகாருண்யம்

## ஜீவகாருண்ய மென்றாலென்ன?

சர்வ ஜீவர்களிடத்திலும், சம திருஷ்டியுடன் கருணை யோடிருத்தலாம். பின்னும் ஓர் ஜீவனுக்கும் இம்மை வராதிருக்கக் கூடிய மார்க்கமும், புலால் மறுத்தலும் ஜீவகாருண்யத்தி லொன்றாம். ஏனெனில் புலாலுண்ண இச்சை கொள்ளில் ஜீவ ஹிம்சை செய்யாதிருக்க முடியாது. ஜீவனை ஹிம்சிக்கப் பாவமும், காருண்யக் குறைவுமுண்டாகிறது. ஆனதால் புலாலை நிவிர்த்தித்தல் தகுதியாம். பின்னோ மற்றெந்த ஜீவராசிகளின் மாமிசங்களின்மீது இச்சையுண்டாகிறதோ அந்தந்த ஜீவராசி களைக் கொலை செய்யாதிருக்க முடியாது. மனம் கொலை செய்ய நினைப்பதனாலும் காருண்யக் குறைவுண்டாகிறது. மற்றோ புலால் தாமத குண ஆகாரமாயிருப்பதால் ஞானத்தை யடைய முயற்சிக்கின்ற அப்பியாசிகளுக்குத் தடையாயிருப்ப தாலும் எனிலோ அஞ்ஞானிகளுக்குக் கூறவா வேண்டும். எக் காரணத்தால் மாமிசம் ஞானத்தையடைய முயற்சிப்பவர்களுக்குத் தடையாமோ அக்காரணத்தாற் தன்னிடத்தில் தனக்கே காருண்யக் குறைவுண்டாகிறது. இக்காரணங்களால் புலாலை அவசியம் நிவிர்த்தி செய்ய வேண்டும். பின்னையோ புலான் மறுத்தலால் ஜீவகாருண்ய முண்டாகிறது. ஜீவகாருண்யமுண்டாக பக்தியுண்டாகிறது. பக்தியுண்டாக யோகமும், யோகத்தால் ஞானமுமுண்டாகிறது. இவ்வாறே :-

*பத்தியா லியோகஞ்சாரும் யோகத்தாற் பரமஞானஞ்*
*சித்தியா மிதற்காதாரஞ் சீவகாருண்யமன்றோ.*

என வள்ளலார் கூறியிருக்கின்றார்.



பின்னும் புலாலுண்ணலால் வருந்தோஷங்களை வள்ளலாரே கூறியிருக்கின்றனர். அதாவது:-

*அம்மா வெனவலற வாருயிரைக் கொன்றருந்தி*
*இம்மானு டரெல்லா மின்புற்றி ருக்கின்றார்*
*அம்மா வெனுஞ்சத்தங் கேட்டகன் றமாதவர்க்கும்*
*பொய்மா நிறையமென்றாற் புசித்தவர்க்கென்*
*சொல்லுவதே.*

எனவும் கொல்லா விரதம் இல்லாதவர்களின் நாமத்தைக் கூட உச்சரிக்கக் கூடாதென்று தாயுமானவருங் கூறியிருக்கின்றனர். மற்றும் பல பிரசித்தியான நூல்களிலும் ஜீவகாருண்யமற்ற மனிதர்கள் மனிதர்களல்லவென்று சொல்லப்பட்டிருக்கிறது.

மைந்தா! நாம் நம்முடைய சரீரம், மனது, ஆத்மா முதலிய வஸ்துக்களை எப்படிப் பாவிக்கிறோமோ அப்படியே சர்வ ஜீவர் களையும் பாவிக்க வேண்டியது. தானடைந்த ஞான அனுபவத்தை உலகத்திலுள்ள சர்வ ஜீவர்களும் அடைய வேண்டுமென்னும் அபிப்பிராயத்தால் போதிப்பதும் ஜீவ காருண்யமாம். ஜீவகாருண்ய மின்றி மோக்ஷமடைதல் கூடாது. மேற்கூறிய ஜீவகாருண்ய மனமின்றி மோக்ஷமடைய முயலுபவர்களின் முழு எண்ணம் பயனற்றதேயாம். ஜீவர்களிடத்து நமக்குக் காருண்யமில்லை யாயின் நம்மிடத்திலும் ஈஸ்வரனுக்குக் காருண்யமுண்டாகாது. ஈஸ்வர காருண்யமில்லையாயின் மோக்ஷமடைதல் முடியாது. ஆதலால் மோக்ஷமடைய வேண்டுமாயின், ஈஸ்வர கிருபை, குரு கிருபை, வேதாந்த கிருபை, அந்தக்கரண கிருபை இந் நான்கின் கிருபை அவசியமாம். இந்நான்கின் கிருபையைப் பெறுநிமித்தம் ஒவ்வொருவர்களும் அவசியம் ஜீவகாருண்யத்தை அடைதல் வேண்டும். அதில் ஈஸ்வர கிருபை பெற முயலுபவர் கள் சர்வ ஜீவர்களிடத்திலும் மிகுந்த காருண்யத்தைச் செலுத்த வேண்டியது. குரு கிருபை பெற முயலுபவர்கள் குருவினிடத்தும்

ஓம்

# ஜீவகாருண்யம்

**ஜீவகாருண்ய மென்றாலென்ன?**

சர்வ ஜீவர்களிடத்திலும், சம திருஷ்டியுடன் கருணை யோடிருத்தலாம். பின்னும் ஓர் ஜீவனுக்கும் இம்மை வராதிருக்கக் கூடிய மார்க்கமும், புலால் மறுத்தலும் ஜீவகாருண்யத்தி லொன்றாம். ஏனெனில் புலாலுண்ண இச்சை கொள்ளில் ஜீவ ஹிம்சை செய்யாதிருக்க முடியாது. ஜீவனை ஹிம்சிக்கப் பாவமும், காருண்யக் குறைவுமுண்டாகிறது. ஆனதால் புலாலை நிவிர்த்தித்தல் தகுதியாம். பின்னோ மற்றெந்த ஜீவராசிகளின் மாமிசங்களின்மீது இச்சையுண்டாகிறதோ அந்தந்த ஜீவராசி களைக் கொலை செய்யாதிருக்க முடியாது. மனம் கொலை செய்ய நினைப்பதனாலும் காருண்யக் குறைவுண்டாகிறது. மற்றோ புலால் தாமத குண ஆகாரமாயிருப்பதால் ஞானத்தை யடைய முயற்சிக்கின்ற அப்பியாசிகளுக்குத் தடையாயிருப்ப தாலும் எனிலோ அஞ்ஞானிகளுக்குக் கூறவா வேண்டும். எக் காரணத்தால் மாமிசம் ஞானத்தையடைய முயற்சிப்பவர்களுக்குத் தடையாமோ அக்காரணத்தாற் தன்னிடத்தில் தனக்கே காருண்யக் குறைவுண்டாகிறது. இக்காரணங்களால் புலாலை அவசியம் நிவிர்த்தி செய்ய வேண்டும். பின்னையோ புலான் மறுத்தலால் ஜீவகாருண்ய முண்டாகிறது. ஜீவகாருண்யமுண்டாக பக்தியுண்டாகிறது. பக்தியுண்டாக யோகமும், யோகத்தால் ஞானமுமுண்டாகிறது. இவ்வாறே :-

*பத்தியா லியோகஞ்சாரும் யோகத்தாற் பரமஞானஞ்*
*சித்தியா மிதற்காதாரஞ் சீவகாருண்யமன்றோ.*

என வள்ளலார் கூறியிருக்கின்றார்.



பின்னும் புலாலுண்ணலால் வருந்தோஷங்களை வள்ளலாரே கூறியிருக்கின்றனர். அதாவது:-

*அம்மா வெனவலற வாருயிரைக் கொன்றருந்தி*
*இம்மானு டரெல்லா மின்புற்றி ருக்கின்றார்*
*அம்மா வெனுஞ்சத்தங் கேட்டகன் றமாதவர்க்கும்*
*பொய்மா நிறையமென்றாற் புசித்தவர்க்கென்*
*சொல்லுவதே.*

ஊனவும் கொல்லா விரதம் இல்லாதவர்களின் நாமத்தைக் கூட உச்சரிக்கக் கூடாதென்று தாயுமானவருங் கூறியிருக்கின்றனர். மற்றும் பல பிரசித்தியான நூல்களிலும் ஜீவகாருண்யமற்ற மனிதர்கள் மனிதர்களல்லவென்று சொல்லப்பட்டிருக்கிறது.

மைந்தா! நாம் நம்முடைய சரீரம், மனது, ஆத்மா முதலிய வஸ்துக்களை எப்படிப் பாவிக்கிறோமோ அப்படியே சர்வ ஜீவர் களையும் பாவிக்க வேண்டியது. தானடைந்த ஞான அனுபவத்தை உலகத்திலுள்ள சர்வ ஜீவர்களும் அடைய வேண்டுமென்னும் அபிப்பிராயத்தால் போதிப்பதும் ஜீவ காருண்யமாம். ஜீவகாருண்ய மின்றி மோக்ஷமடைதல் கூடாது. மேற்கூறிய ஜீவகாருண்ய மணமின்றி மோக்ஷமடைய முயலுபவர்களின் முழு எண்ணம் பயனற்றதேயாம். ஜீவர்களிடத்து நமக்குக் காருண்யமில்லை யாயின் நம்மிடத்திலும் ஈஸ்வரனுக்குக் காருண்யமுண்டாகாது. ஈஸ்வர காருண்யமில்லையாயின் மோக்ஷமடைதல் முடியாது. ஆதலால் மோக்ஷமடைய வேண்டுமாயின், ஈஸ்வர கிருபை, குரு கிருபை, வேதாந்த கிருபை, அந்தக்கரண கிருபை இந் நான்கின் கிருபை அவசியமாம். இந்நான்கின் கிருபையைப் பெறுநிமித்தம் ஒவ்வொருவர்களும் அவசியம் ஜீவகாருண்யத்தை அடைதல் வேண்டும். அதில் ஈஸ்வர கிருபை பெற முயலுபவர் கள் சர்வ ஜீவர்களிடத்திலும் மிகுந்த காருண்யத்தைச் செலுத்த வேண்டியது. குரு கிருபை பெற முயலுபவர்கள் குருவினிடத்தும்

பக்தி சிரத்தையுடன் நான்குவிதமான பணிவிடைகளையும் அவசியம் அனுஷ்டித்தல் வேண்டும். வேதாந்த கிருபை பெற முயலுபவர்கள் வேதாந்த வாக்கியங்களினிடத்திலும் வேதாந்த சாஸ்திரங்களினிடத்தும் அன்பு வைத்தல் வேண்டும். அந்தக் கரண கிருபை பெற முயலுபவர்கள் மனதை விடயாகாரமாக விடாமல் பிரஹ்மாகாரமாகச் செலுத்தல் வேண்டும். ஆனதால் மேற்கூறிய நான்கின் கிருபைக்கும் ஆதாரம் ஜீவகாருண்யமாம். ஈஸ்வர கிருபை பெற்றாலன்றி ஏனைய மூன்றின் கிருபையும் சித்தியாகாது. இவைகள் சித்தியாமற் போகவே மோக்ஷம் சித்தி யாதலால் அக்கிருபையை பெறுநிமித்தம் ஜீவகாருண்யத்தை அவசியம் அனுஷ்டித்தல் வேண்டும்.

முதலாவதான ஜீவகாருண்யமாவது

ஆத்மா இன்னது; அனாத்மா இன்னது என்று பகுத்தறியும் விவேகமில்லாத மந்த மனிதர்கட்கு அந்த விவேகமுண்டாகும்படி போதித்தலும் ஆத்ம சாக்ஷாத்காரத்தையடையும் உபாயத்தைக் காண்பித்தலும் அதன் விதிகளை அதனதிகாரிகளுக்கு ஒளியாமல் உள்ளவாறு கூறுதலுமாம்.

இரண்டாவது

அந்தக்கரணத்திலுள்ள சுக, துக்கங்களில் ஆழ்ந்தி மாறி மாறி அனுபவித்துக் கொண்டிருப்பபவர்களுக்கு எப்போதும் சுகமே உண்டாகும்படி அம்மார்க்கத்தைக் காண்பித்தலாம்.

மூன்றாவது

பசி தாகங்களால் வரப்பட்ட துக்கங்களை நிவிர்த்திக்கும் பொருட்டுப் போஜன சாலை, தண்ணீர்ப் பந்தல் முதலியன



ஏற்படுத்தலாம். இம்மூன்றில் முதலாவதான ஜீவகாருண்யமே மிக்க உயர்ந்ததாம். இதையே தாயுமானவரும்,

*காகமுறவு கலந்துண்ணக் கண்டீர கண்டாகாரசிவ*
*போகமெனும் பேரின்பவெள்ளம் பொங்கித்*
*ததும்பிப்பூரணமா*
*யேகவுருவாய்க் கிடக்குதையோ வின்புற்றிட*
*நாமினியெடுத்த*
*தேகம்விழுமுன் புசிப்பதற்குச் சேரவாருஞ் சகத்தீரே.*

என்று வற்புறுத்தி அழைத்திருக்கிறார்.

*தாவிலாத நற்றக்கணையாவது*
*பூவினோர்க்கருள் பொற்கொடையன்றுகொல்*
*ஆவிவேறென் றயர்வுருமாந்தருக்*
*கோவிலாப்புகழ் ஞானமுதவலாம்.* (பாகவதத்தில்)

ஆதலால், இதுவே முக்கிய ஜீவகாருண்யமாம் மற்றும் பசி, தாகங்களை நீக்குவித்தல், புலால் மறுத்தல் முதலியனவும் ஜீவகாருண்யமாம். எந்த ஜீவனை இம்சித்தாலும் ஈஸ்வரனை இம்சித்ததேயாம். எவ்வாறெனில் முற்காலத்தில் கைலாசகிரியில் முருகக் கடவுள் வேட்டை மார்க்கமாகக் காட்டிற் சென்று வேட்டையாடி வரும்போது ஓர் பூனை எதிரில் வந்தது. அந்தப் பூனையின் முகத்தில் வேலாயுதங்கொண்டு கீரிவிட்டு இருப் பிடத்திற்கு வந்தனர். வந்து ஜகதம்பிக்யையான தன் மாதாவாகிய பார்வதா தேவியின் முகத்தைப் பார்த்தவுடன் முகத்திற் பலமான கீறல் ஏற்பட்டிருந்தது. அதைக் கண்டவுடன் முருகனுக்கு மிகுந்த கோபம் உண்டாகி, "தாயே! இப்படி யார் செய்தது? செய்தவனைக் கண்டால் இப்பொழுதே நாசமாக்கி விடுவேன்" என்று கூற, அம்மையும், "மைந்தா! இக்கீறல் நீயே செய்தது" என்றனள். என்றவுடன், நான் செய்யவில்லையென "புத்திரா! நீ

வேட்டையாடி வரும்போது ஓர் பூனையின் முகத்தில் கீறின யல்லவா?" என்று கூற முருகனும், "பூனையைக் கீறினாலுனக் கென்ன?" என்று சொல்ல அம்பிகையும், "தனயா! உலகத்திலுள்ள எல்லா ஜீவர்களும் என்னுடைய அம்சமானபடியால் எந்த ஜீவனை இம்சித்தாலும் என்னை இம்சித்ததாகும். ஆதலால் இக்கீறல் செய்தவன் நீயே" என்று கூறினள். அன்றிருந்து முருகன் வேட்டைக்குப் போவதை விட்டொழித்தனராம். ஆதலால் எந்த ஜீவனை ஹிம்சித்தாலும் ஈஸ்வரனை இம்சித்ததேயாம். எல்லா ஜீவர்களையும் தயையுடனும் சம திருஷ்டியுடனும் பார்த்து, ஜீவகாருண்யத்தை மேன்மேலும் விருத்தி செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு ஜீவகாருண்யக்கிரமஞ் சொல்லப்பட்டது.

-: ஓம் தத் சத் :-



ஓம்

# கரும யோகம்

## கரும யோகமென்றாலென்ன?

கருமத்தில் மனம் ஒற்றுமையடைதலாம்; அல்லது கருமத்தில் மனம் பற்றாதிருத்தலாம்.

## கருமம் எத்தனை வகைப்படும்? கருமமென்றாலென்ன?

காமியம், நிஷ்காமியம் என கருமம் இருவகைப்படும். மனோ வாக்குக் காயங்களால் செய்யப்பட்டதெல்லாம் கருமமேயாம்.

**காமிய கருமமாவது**

மனைவி, புத்திரன், செல்வம், மனை முதலிய அநித்திய பதார்த்தங்களை இச்சித்துத் திரிவித கரணங்களால் செய்யப்பட்ட புண்ணிய கருமமாம்.

**நிஷ்காமிய கருமமாவது**

கேவலம் ஞானத்தை மாத்திரம் இச்சித்து ஏனைய அனாத்ம வஸ்துக்களில் இச்சையை விடுத்துத் திரிவித கரணங்களால் செய்யப்படும் புண்ய கருமமாம் அல்லது சின்மாத்திர வடிவமான நான் ஓர் கருமமும் செய்கிறவனும் செய்விக்கிறவனுமல்லன். எனக்கு அன்னியமான மனம் வாக்குச் சரீரங்கள் அதனதன் அதி தேவதைகளுடன் செய்கின்றனவென்று அதிற் பற்றற்றிருத்தலாம் அல்லது புண்ணிய கருமங்களால் சுக, துக்கம் வருங்காலத்தில் அதில் மனம் ஆழ்ந்தாதிருத்தலாம். அல்லது சற்கருமங்கள் செய்யும் போது அவரவர்கள் ஆசாரியர்கள் கூறிய லக்ஷியத்தில் மனதை நிறுத்திக் கொண்டு கருமங்களியற்றி ஈஸ்வரார்ப்பணஞ் செய்தலாம். அல்லது கருமம் செய்கிறவனும் செய்விக்கிறவனும்

அதன் பிரயோஜனமும் பிரஹ்மத்தைத் தவிர அன்னியமல்ல வென்று பார்த்துக் கருமஞ் செய்தலாம். இதற்குப் பிரமாணம் :

**கீதையில்**

*மெய்யுறவுன்னை யென்னிலே வைத்தாலெனின்னில்*
*வேறின்றி யொன்றாதற்*
*கையுறவில்லை அது செய முடியாதாயினட்பியாசமே*
*பயில்வாய்*
*பொய்யறவதுவும் புரிகிலாயெனிலுன் வினைகளென்*
*பொருட்டினாற் புரிவாய்*
*செய்யு மவ்வினை களப்படிச் செயாயேல்*
*வினைப்பயன்ற விரவே செய்வாய். (எனவும்)*

**வாசிட்டத்தில்**

*புறப்பேறுகளை வேண்டி இயற்றுகின்ற புண்ணியத்தைப்*
*புவியிலுள்ளோர் சிறப்பான நல்லறிவு வேண்டுமென்று*
*முதற் செய்யிற் பேறாம்.*

எனவுங் கூறப்பட்டிருக்கிறது. பின்னும்,

ஓர் தினத்திற்கு ஓர் தரம் கால், கை, முகம், மார்பு, கழுத்து முதலிய பஞ்சாங்க சுத்தி செய்து கொண்டு விபூதியோ திருமண் காப்போ வெறு நெற்றியோ, சந்தனத்திலகமோ இட்டுக் கொண்டு, பக்தி சிரத்தையுடன் இரு கை நிறைய ஜலம் எடுத்து, வடக்கு கிழக்கு திக்கு நோக்கி நின்று கொண்டு, மனதில் இவ்விதமாகச் சங்கற்பஞ் செய்ய வேண்டும். அதாவது, "என்னுடைய மனம், வாக்கு, சரீரம் முதலிய திரிவித கரணங்களால் இதுவரை செய்யப்பட்ட புண்ணிய கருமங்களின் பிரயோஜனங்களெல்லாம் எனது உபாச முகூர்த்தத்தின் சொரூபத்திற்கே அர்ப்பணமென்று" ஜலத்தைப் பூமியில் விட்டுவிடுதலாம். மற்றும் மனதை ஆத்மா விடத்து இருக்க முயற்சிப்பதும் நிஷ்காம கருமத்துளொன்றாம்.



மனம் யாதொரு சங்கமின்றி யிருந்து கொள்வதற்கேதுவெல்லாம் நிஷ்காம கருமமேயாம். பின்னும் சுபகருமம், அசுபகருமம் இதில் எக்கருமங்களைச் செய்தபோதிலும் அதன் பலத்தை ஈஸ்வரார்ப் பணஞ் செய்தலேயாம். இதுவும் நிஷ்காம கருமத்துளொன்றாம். இதற்குப் பிரமாணம் :-

*மன்னுமைம்புலனை மாய்த்து மருவிய மனத்தையென்று*
*மென்னிடத்திருத்தல் வேண்டு மிருத்தலிங்*
*கரிதாமென்னின்*
*சொன்னநற்றவை செய்தாலுந் துகளுறுபவை*
*செய்தாலும்*
*பன்னுறுமன் பினந்தப் பயனெமக் களித்தனன்றே.*

என பாகவதத்தில் கூறப்பட்டிருக்கிறது.

கரும யோகத்தின் உண்மையை அறிந்து கொண்டவன் மோக்ஷத்தினுண்மையை யறிந்து கொண்டவனேயாம். "ஞான புத்திரா! மனிதர்கள் மோக்ஷமடைய இச்சை கொள்வார்களாயின் முற்கூறிய காமிய கருமங்களை அவசியம் விட்டொழித்து நிஷ்காமிய கருமங்களை அவசியம் பக்தி சிரத்தையுடன் செய்ய வேண்டும். காமிய கருமமானது ஜன்மத்தை மேன்மேலும் விருத்தி செய்து கொண்டு வருமே தவிர நிவிர்த்திக்க மாட்டாது ஏனெனில் அவரவர்கள் மனோநிச்சயமெப்படியோ அப்படியே அனுபவித்துத் தீர வேண்டியதவசியம். அனுபவிக்க வேண்டு மானால் ஜன்மமெடுத்தே தீர வேண்டும். நிஷ்காம கருமமோ கேவலம் மோக்ஷ இச்சை மாத்திரமிருக்கிறபடியால் சித்த சுத்தி வாயிலாக மோக்ஷத்தைக் கொடுப்பதாம். ஆதலால் அறிவுடையவர்கள் காமமற்ற நிஷ்காம கருமங்களையே முறையுடன் அனுஷ்டித்தல் வேண்டும். புத்திரா! உலகத்தி லுதித்த ஒவ்வொருவர்களும் கருமம் செய்யாதிருக்க முடியாது. கருமம் எப்போதுமுள்ளது. அது இன்ன காலத்திலுண்டானதென்று

அரியக் கூடாததால் அநாதியாம், அநாதியெனில் வாஸ்தவத்தில் கற்பித அநாதியாம், விசிட்டாத்துவைதிகள் கருமத்தை வாஸ்தவ அநாதியென்றே ஒப்பியிருக்கின்றனர். அத்வைதிகளோ கற்பித அநாதியென்று நிச்சயித்திருக்கிறார்கள். இவ்விரண்டில் எதை நிச்சயிக்கிறதெனில் இரண்டையும் நிச்சயிக்க வேண்டியதேயாம். ஏனெனில் கருமம் வாஸ்தவ அநாதியானாலென்ன, கற்பித அநாதியானாலென்ன கருமம் நசிக்க வேண்டுவதொன்றே ஆயின் கருமம் வாஸ்தவமெனில் அக்கருமத்தால் உண்டாகும் பயன்களும் வாஸ்தவமாதல் வேண்டும். அப்படிக் கருத்தால் உண்டாகும் பயன் வாஸ்தவமென்று பிரமாணங்களுங் காணோம். யுக்தியுமில்லை. அனுபவமில்லை. ஆனாலும் கருமத்தைப்பற்றி விவரிப்பு அதிகமாய் வேண்டாம். கருமம் எப்போதுண்டான தென்னுஞ் சங்கை கூடாது. ஏனெனில் அச்சங்கைக்குச் சமாதானம் பீஜாங்குர நியாயமாக முடிகிறது. இதற்குப் பிரமாணம்:-

*தேகமெடா முன்கருமச் செயல்வருமாறே தெனவே*
*ஏகமா மரமும்வித்து மெனுமுறைபோ லென்றவரோ.*

என்று கீதையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால்:-

அச்சங்கைக்குச் சமாதானமிதுவாம். கருமம் எப்போது உண்டானது? ஏனுண்டாயிற்று? யாரிடத்துண்டாயிற்று? என்னும் பிரயோஜனமற்ற சங்கைகளை விட்டொழித்துக் கருமம் நாசமாகும் உபாயத்தை மாத்திரம் கேட்டுத் தெரிந்து கொண்டு அதன் வழி அனுஷ்டித்தல் வேண்டும். கருமம் நாசமாகும் வழி ஸ்ரீபரம சற்குரு நாதனாலுபதேசிக்கப்படுகிற மஹா வாக்கிய விசாரணையினுச்சியிலுதயமாகா நின்ற தத்துவ ஞானமே கருமத்தை நாசமாக்குமுபாயமாம்". இவ்வாறு கருமம் சொல்லப்பட்டது.

-: ஓம் தத் சத் :-



ஓம்

# இராஜயோகம்

**ஸ்வாமி! இராஜயோகத்தின் அங்கங்களையும் அதன் லக்ஷணங்களையும் அதை அடையும் விபரங்களை யும் அடியேனுக்கு அனுக்கிரகஞ் செய்ய வேண்டும்.**

ஞானபுத்திரா! இராஜயோகமானது யோகங்களெல்லாவற்றி லும் சிறந்ததும் பெருமையுடையத்தானதுமாம். ஆனதால் நீ கேட்டதும் மிக்க நன்மைதான். இந்த இராஜயோகத்தை தேஜோபிந்து உபநிடத்திலும் அபரோக்ஷானுபூதியிலும் பதஞ்சலி யோக சூத்திரத்திலும் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக் கிறது. அவற்றை உனக்குச் சொல்லுகிறேன். கவனமாகக் கேட்பாயாக.

மைந்தா! இராஜயோகமானது பதினைந்து அங்கங்களோடு கூடியது. அதாவது 1 இயமம் 2. நியமம் 3. தியாகம் 4. மௌனம் 5. தேசம் 6. காலம் 7. ஆசனம் 8. மூலபந்தம் 9. தேகசமாத்துவம் 10. லக்ஷியதிருஷ்டி 11. பிராணாயாமம் 12. பிரத்தியாகாரம் 13. தாரணை 14. தியானம் 15. சமாதி இவைகளாம். இவற்றுள்:-

1. இயமமாவது

நாம் நம்முடைய கண்ணால் பார்க்கக் கூடிய எல்லா வஸ்துக்களையும் பிரஹ்ம பாவனையாகப் பார்ப்பதால் சப்தம், ஸ்பரிசம், உருவம், ரசம், கந்தம் என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தையும் வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபஸ்தம் என்னுங் கருமேந்திரியங்களைந்தையும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணம் நான்கையும் அதனதன் சுபாவத் தொழிலில் விடாது நிரோதித்தலாம்.

2. **நியமமாவது**

அந்தக்கரண விருத்தியை துவைதமான உலக வியாபாரங் களில் செல்லவிடாமல் வேற்றுமையில்லாத பிரஹ்மத்தை நோக்கி அதனாகாரமாகச் செலுத்தலாம்.

3. **தியாகமாவது**

ஸ்வர்ணத்தினிடத்தில் ஆரோபிதமாகிய நகைகளெல்லாம் ஸ்வர்ணத்தைத் தவிர அன்னியமில்லாதது போலவும் மண்ணி லாக்கப்பட்ட கடம் மண்ணைத் தவிர அன்னியமில்லாதது போலவும், பிரஹ்மத்திற் கற்பிதமான பிரபஞ்சங்களெல்லாம் பிரஹ்மத்தைத் தவிர எப்போதும் இல்லவேயில்லை என அறிந்து பிரபஞ்சத்திலுள்ள சத்திய புத்தியை விட்டு விடுதலாம்.

4. **மௌனமாவது**

வேதங்களிலுள்ள பிரமாண வாக்குகளினாலும் மனதாலும் எட்டப்படாததாயும் தத்துவ விசாரஞ் செய்யும் ஞானிகளால் மாத்திரம் அடையக் கூடியதாயுமிரா நின்ற நித்திய பரமானந்த மௌன சொரூபத்தைச் சதாகாலமும் நினைத்துக் கொண்டிருத்தலாம். கேவலம் வாக்கு மாத்திரம் மௌனமாயிருத்தல் இராஜயோக மௌனமல்ல.

5. **தேசமாவது**

எந்த வஸ்துவின் சொரூபம் ஆதி, மத்தியம், அந்தம் மூன்று மின்றியதாயும் மேல் கீழ் நடு முழுமையும் வியாபித்துள்ளதாயும் எங்கும் தன்மயம் விடாமல் தானாய் விளங்கிக் கொண்டிருக்கிறதோ அந்தத் தேசமே இராஜயோகிகள் வசிக்கத்தக்க தேசமாம்.



6. **காலமாவது**

அகண்ட சச்சிதானந்த பரவியாபக சின்மய சிதாகாச பிரஹ்மத்தில் அத்தியாஸமாகத் தோற்றப்பட்ட பிரமா முதல் ஸ்தம்ப பரியந்தமுள்ள சகல பிரபஞ்சங்களும் க்ஷண நேரமேனும் துவைதமாக = அதாவது வேறாகத் தோன்றாமல் ஐக்கியத் தொடிருத்தலாம்.

7. **ஆசனமாவது**

எந்த நிலைமையில் தேகாதி அவயவங்களை வைத்துக் கொண்டிருந்தால், எப்போதும் மனதிற்குச் சுகமாக வருத்தம் தோன்றாமல் பிரமானுசந்தானம் நன்றாய் நடக்குமோ, அந்த நிலைமையும், எல்லாப் பூதங்களுக்குமாதியாய்ச் சர்வத்துக்கும் இருப்பிடமாய் மூன்று காலத்திலும் நாசமற்றதாயுள்ள வஸ்துவின் இருப்பெதுவோ அதுவே இராஜயோகிகள் அடையத்தக்க ஆசனமாம்.

8. **மூலபந்தமாவது**

எந்த வஸ்துவானது ஜீவேஸ்வர ஜகத் பிரபஞ்சங்களுக்கும் அவைகளைத் தோற்றுவிப்பதாகிய சங்கற்பத்திற்கும் மூலமா யிருக்கின்றதோ அந்த வஸ்துவில் எப்போதும் மனத்தைப் பந்திக்கச் செய்வதே இராஜயோகிகளடையத்தக்க மூலபந்தமாம்.

9. **தேக சமர்த்துவமாவது**

அசைவின்றிய பருவதங்களிலிராநின்ற கற் பதுமைகள் அசைவின்றி நிலை பெற்றிருப்பது போலச்சமாகிய அகண்ட சொரூபத்தில் மனதை அசைவின்றி நிலைத்திருக்கும்படி நிறுத்துவதே தேக சமர்த்துவமாம். அஃதன்றி உலர்ந்த விறகு மேலத் தேகத்தை ஒழுங்காக வைத்துக் கொள்ளுவதல்லவாம்

**10. இலக்ஷிய திருஷ்டியாவது**

ஆத்மானாத்ம விசாரணையினா லுதயமாகா நின்ற ஞான திருஷ்டியால் சகல பிரபஞ்சங்களையும் பிரஹ்ம மயமாகப் பார்ப்பதாம். அல்லது திரிபுடி ரூபமாகிய உலகம் யாதொரு வஸ்துவிலுண்டாய் அடங்குகின்றதோ அந்த வஸ்துவில் மனதை வைப்பதாம். அல்லது காண்பான், காக்ஷி, காணப்படு பொருள் இம்மூன்று மெவ்விடத்தில்லையோ, அவ்விடத்தில் திருஷ்டியை வைப்பதாம். அல்லது சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் மூன்று அவஸ்தைகளுமில்லாதவிடத்தில் திருஷ்டியை வைப்பதாம். இஃதல்லாமல் மூக்கு நுனி, மூலாதாரம் முதலிய இடங்களில் திருஷ்டியை வைப்பது இராஜயோகிகளனுஷ்டிக்கத் தக்க இலக்ஷிய திருஷ்டியன்றாம்.

**11. பிராணாயாமமாவது**

பிரம, விஷ்ணு, ருத்ர, மஹேஸ்வர, சதாசிவன் முதலிய பஞ்ச மூர்த்திகளையும் சகல ஜீவர்களையும் சித்த முதலிய அநாதி கற்பித வஸ்துக்களையும் அதிஷ்டான சைதன்யமாகப் பார்த்துச் சகல மனோவிருத்திகளையுங் கண்டிப்பது பிராணா யாமமாம். இதில் அஞ்ஞானத்தின் காரியமாகிய சகல ஜடப் பிரபஞ்சங்களும் நாமல்லவென்று விசாரணை செய்து தள்ளுவது ரேசகம். உபாதி யற்ற பிரஹ்மமே நாம் என்னும் மனோவிருத்தியை ஸ்திரப் படுத்துவது பூரகம். அந்த மனோவிருத்தியை அசைய விடாமல் நிறுத்திக் கொள்வது கும்பகம். கேலவம் பிராண சலனத்தை நிறுத்துவது இராஜயோகப் பிராணாயாமமல்லவாம்.

**12. பிரத்தியாகாரமாவது**

ஆத்மாவினால் பார்க்கப்பட்ட அனாத்மாக்களையெல்லாம் ஆத்ம ரூபமாகப் பார்த்து, மனத்தைப் பரமார்த்த பிரத்திய



கான்மா விடத்தில் திருப்பிக் கொள்ளுதல். எந்த வஸ்துக்கள் பார்க்கப்படுகிறதோ அந்த வஸ்துக்கள் முழுவதும் பிரஹ்மமாகப் பார்த்தல் பிரத்தியாகாரமாம். பின்னும் நித்திய கருமங்களின் பிரயோஜனத்தை விட்டுவிடுதலும் சகல விஷயங்களிலும் பராமுகமாயிருந்தலும் பிரத்தியாகாரமாம்.

**13. தாரணையாவது**

மனதாற் பற்றப்பட்ட விஷயங் களெல்லாவற்றையும் பிரஹ்ம சொரூபமாகப் பார்த்து, அந்தச் சொரூபத்தை மனதில் திடமாய் வைத்துக் கொள்ளுதலாம்.

**14. தியானமாவது**

அன்னமய, பிராணமய, மனோமய, விஞ்ஞானமய, ஆனந்த மயம் என்னும் ஐந்து கோசங்களையுந் தாண்டி அப்பாலுள்ள சூனிய யுத்தியையுந் தள்ளி நின்றவிடத்தில் பிரமாகார விருத்தியை விட்டுவிட்டுத் தியானிக்காமல் தைல தாரைபோல் இடைவிடாமல் அப்பியாஸிக்கக் கூடிய அகண்டாகார விருத்தியெனவறியவும்.

**15. சமாதியாவது**

மனோவிருத்தி வெளிப்படாமல் அகண்டப் பிரஹ்மமாக விருப்பதும் தியேயாகார விருத்திகளின்றிருப்பது. அல்லது பிரஹ்மாகார விருத்தியைப் பழகி அதையுமறந்திருப்பது என்றறிக.

## சமாதி எத்தனை வகைப்படும்?

**சவ்விகற்பம்** விகற்பத்தோடு கூடியது. **நிருவிகற்பம்** (விகற்ப மற்றது) என இரு வகையாம். அவற்றில், **சவ்விகற்பமாவது**

வெளிமுக நாட்டமின்றி திருபுடித் தோற்றத்துடன் ஏகமான பிரஹ்மத்தினிடத்திலிரா நின்ற மனோவிருத்தியின் நிலைமையாம்.

**நிருவிகற்பமாவது**

அந்தக்கரணவிருத்தி பிரஹ்ம சொரூபத்தில் லயித்து, தியான மும் தியானிக்கிற புருஷனும் மறந்து, தியான வஸ்து மாத்திரமாக மிஞ்சித் திருபுடித் தோற்றமின்றிருப்பதாம்.

**சமாதி விக்கினங்கள் ஒன்பது விதமாவன**

1. தனிமையாக இருந்து, சமாதி பழகும்போது சொரூப அனுசந்தானம் மறந்து போகுதல்.
2. பின்பு தியானம் பண்ணிக் கொள்வோமென்று சோம்பலுண்டாகுதல்.
3. விஷய போகங்களிலிச்சையுண்டாகுதல்.
4. நித்திரை வருதல்.
5. அந்தகாரந் தோற்றுதல்
6. விஷயங்களைப் பற்றி மேன்மேலும் விக்ஷேபமுண்டாகுதல்.
7. பிரகாசந் தோற்றுதல்.
8. வேர்வையுண்டாதல்.
9. ஆத்மா அனாத்மாக்களைப் பகுத்துப் பார்க்குமவதியில் ஒன்றுங் காணோமே யென்னுஞ் சூனிய புத்தியுண்டாகுதல் **இவை ஒன்பதும் சமாதிக்குத் தடைகளாம்.** இந்த ஒன்பதும் **லயம், விக்ஷேபம், கஷாயம், ரஜாஸ்வாதம்** என்னும் நான்கு தடைகளுள் அடக்கமாம்.



**1. லயமாவது**

சொரூபத் தியானஞ் செய்யுநிமித்தம் மனதைச் சர்வ விடயங் களினின்றுந் திருப்பி, அந்தர்முகமாகத் தியானிக்கும்போது மனது அகண்ட வஸ்துவையடையாமல் நித்திரைக்குச் சமான மான ஒரவஸ்தையை அடைவதாம்.

## மேற்கூறிய லயத்தை நிவிர்த்திக்கும் உபாயமி யாது?

**புத்திரா!** லயம் வந்தவுடன் அப்பியாஸி அந்த இடத்தைவிட்டு எழுந்து, பத்தடி தூரம் நடந்து, மறுபடியும் மற்றோரிடத்து உட்கார்ந்து, பிரணவ சப்தத்துடன் பத்து முறை பிராணாயாமம் செய்து விட்டுத் தியானத்திற் காரம்பிக்க வேண்டும். பின்னும் மீறி லயம் வருமாயின் பரமகுருவினிடம் காரண பஞ்சாக்ஷரத்தை உபதேசங் கேட்டுக் கொண்டு ஏகாக்கிர மனதுடன் பதினாயிரந் தரஞ் செபிக்க நீங்கும்.

**லயமுண்டாகுங் காரணங்கள்**

அனந்த ஜன்மங்களின் நித்திரைப் பழக்கத்தினாலும், தற்காலம் நித்திரைக் குறைவு, அதிக போஜனம், போஜனக் குறைவு, அஜீர்ண வஸ்துக்களைப் புசித்தல், திரேக அலைச்சல், வீண் நினைப்புகளை நினைக்குதல் முதலிய பற்பல காரணங் களால் லயம் உண்டாகிறது. ஆதலால் அதிக நித்திரை செய்தலும், நித்திரையை அடியோடு விட்டு விடுதலும், அதிக போஜனம் செய்தலும், போஜனமில்லாதிருத்தலும், அதிக சரீர உழைப்பும், அதிக சங்கற்பஞ் செய்தலும் உடையவர்களுக்குச் சமாதி யோகஞ் சித்தியாக மாட்டாதென்று ஸ்ரீ பகவற்கீதை ஆறாவது அத்தியாயத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் மித நித்திரை, மித ஆகாரம், மித நினைப்பு, மிதத் தொழில் இவைகளை முதலில் அனுஷ்டிக்க வேண்டும்.

**ஆகார நியாயமாவது**

கால் வயிறு ஜலமும், அரை வயிறு அன்னமுமுண்டு மீதி கால் வயிற்றை வாயு சஞ்சாரஞ் செய்யும்படி வைத்துக் கொள்ளுதலாம். அல்லது பசி தீவிரமாயுள்ள போதெல்லாம் பசி தீரும்படி உண்ணுதலாம்.

**நித்திரையினியமமாவது**

இராத்திரி முப்பது நாழிகையில் முன் பத்து நாழிகையும் பின் பத்து நாழிகையும் விழித்திருந்து, நடுப்பத்து நாழிகையில் நித்திரை செய்வதாம். ஆதலால் சமாதிக்குத் தடையாயுள்ள லயத்தை எந்தவிதத்தினலாவது நிவிர்த்திக்க வேண்டும் என்னுந் தீவிரத்துடன் மேற் கூறிய நியமப்படி அனுஷ்டித்தல் வேண்டும்.

## முன் காலத்திலுள்ள ஞானிகளில் யாருக்காவது லயம் வந்திருக்கிறதோ?

உத்தாலகருக்கும் தாயுமானவருக்கும் வந்திருக்கிறது. அதாவது:-

வாசிட்டத்தில்

*நிகழ்ச்சியொளி யகலுதலுஞ் சுழன்றநெஞ்ச*
*நிசியினடுப் போலுறக்க நேர்ந்ததன்றே.*

என்றும்

தாயுமானவர்

*நித்திரையாய்வந்து நினைவழிக்குங் கேவலமாம்*
*சத்துருவை வெல்லுஞ் சமர்த்தரிவ தெந்நாளோ.*

என்றும் கூறியிருக்கிறார்கள்.



## விட்சேபமென்பதென்ன? அவற்றை நிவிர்த்திக்கும் உபாயம் யாது?

பிரபஞ்சத்திலுள்ள விடயங்களிலருவருப்படைந்த சித்த சுத்தமான மனது பிரமானுசந்தான வாயிலாகப் பிரமானந்தத்தை யடையு நிமித்தம் ஓர் கால் அகமுகப்பட்ட மனது பல ஜன்மப் பழக்கத்தால் விடய வாதனையடைந்து க்ஷண காலமேனும் ஏகாக்கிரப்படாமலிருத்தலும் பிரம்மானந்தம் அதி சூட்சுமமா யிருப்பதனால் பிரஹ்ம சொரூபத்தை மனதடையாமல் விடயங் களையும் விடய போகங்களையும் நினைத்துப் பகிர்முகமாகிச் சஞ்சலிப்பதாம்.

**விக்ஷேப நிவிர்த்திக்குபாயமாவது**

பஞ்சேந்திரயங்களால் வரக்கூடிய சுகங்களிலும் பிரபஞ்சத்தி லும் அசுத்த அனித்திய புத்தியை அடிக்கடி நினைப்பதனாலும், அதனால் வரக்கூடிய சுகதுக்கங்களை ஸ்மரிப்பதனாலும், பிரஹ்மத்தின் லக்ஷணங்களையும் அதனால் வரும் ஆனந்தத்தை யும் சிந்தனை செய்து பார்ப்பதனாலும், மித்தியா சொரூபமான சாக்கிர சொப்பனங்கள் சுழுத்தியலெப்படியில்லையோ அப்படிச் சர்வ விடயங்களும் அத்விதீயப் பிரஹ்ம சொரூபத்திலில்லை யென்று பார்ப்பதாலும், எல்லாவற்றையுந் தன்னுடைய சொரூப மாகப் பார்ப்பதாலும் நிவிர்த்தியாம்.

## கஷாயமென்பதென்ன?

மனதை லயவிக்ஷேபங்களில் செல்ல விடாது தடுத்து அப்பாற் செல்லும்போது வெளியிலுள்ளதும் உள்ளிலுள்ளதுமான இராகத் துவேஷாதி துக்கங்களில் மனம் லயித்துச் சமாதி யிலிருப்பது போலிருப்பதென வரிக.

அந்தக்கரணத்துக்கு ஐந்து நிலைகளிருக்கின்றன

அதாவது, 1. சஞ்சல நிலை 2. உறக்க நிலை 3. உபய நிலை 4. ஓர் வழி நிலை 5. தன்னிலை எனவைந்துமாம். இவ்வைந்தில்

1. சஞ்சல நிலையாவது

அநித்தியமாகிய உலக வாசனை, தேக வாசனை, சாஸ்திர வாசனைகளைப் பொருந்தியதும் பாவ புண்ணியங்களால் அனுபவிக்கப்படும் பல வஸ்துக்களிலும் ஆசையுடையதாய்ச் சலிக்கப்பட்ட மனோவிருத்தியாம்.

2. உறக்க நிலையாவது

நித்திரை, சோம்பல், மயக்கம், வீண் காலம் போக்குதல் முதலிய மனோநிலையாம்.

3. உபய நிலையாவது

எதாவது ஓர் காலத்தில் தியானத்தின் பலத்தால் சமாதி நிலைபெற்றும் அந்த நிலை காற்றினாலலைக்கப்பட்ட தீபம் போல வெளிமுகப்பட்டு ஸ்திரப்படாமல் சுழலுதலாம்.

4. ஒருவழி நிலையாவது

அந்தக்கரண விருத்தியானது பிரஹ்மத்தையடைந்து சமானத்தையடைகிறதாம். அல்லது இயமாதி அஷ்டாங்க யோகப் பழக்கத்தால் ஒரே வஸ்துவில் இடைவிடாமல் தைல தாரைபோற் செல்லும் விருத்திப் பிரவாகமும் அன்னியமான ஓர் விஷயத்திலும் உணர்ச்சி பிரவாதிருப்பதுமாம்.



5. தன்னிலையாவது

தன்னுடைய எதார்த்த சொருபத்தில் மனம் லயித்திருத்தலாம். முற்கூறிய சஞ்சல நிலை, உறக்க நிலை இரண்டையுமுடையவர் களுக்குச் சமாதியில் அதிகாரமில்லை. மத்தியிற் சொன்ன உபய நிலையுடையோர்க்கு அதிகாரமுண்டாம். கடைசியிற் சொன்ன வையிரண்டும் சமாதியிற் சேர்ந்ததென்றே யோக சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவைகளில் உழல் நிலையே தீவிர ராகத் துவேஷங்களால் மூழ்கப்பட்ட கஷாயமாகும்.

## மேற்கூறிய கஷாய தோஷத்தை விஸ்தாரமாக அருளிச் செய்ய வேண்டும்?

மைந்தா! கஷாயமானது பாகியம், ஆந்தரம், வாதனை என்று மூவகையாம். அவற்றுள்

பாகியமாவது

நிகழ் காலத்திலுள்ள புத்திரன், செல்வம், மனைவி இவை களைப் பற்றி வராநின்ற விருப்பு வெறுப்புகளாம்.

ஆந்தரமாவது

இறந்த காலம், எதிர் காலங்களைப்பற்றி வராநின்ற மனோ ராச்சியமாம்.

வாசனையாவது

அநேக ஜன்மங்களில் அனுபவிக்கப்பட்டுள்ள பாகிய அந்தர ராகத் துவேஷாதிகளின் அந்தர்ப்பூதம், அதாவது சமஸ்காரமாம். இவைகளில் பாகிய ஆந்தர இராகத் துவேஷாதிகள் சஞ்சல

நிலையோடு கூடிய அந்தக்கரணத்தி லுண்டாகிறபடியால் அவ்வந்தக்கரணத்திற்குச் சமாதியிலதிகாரமில்லை. ஜன்மாந்தரங் களில் அனுபவித்த இராகத் துவேஷாதிகளின் சூட்சும வாசனை உபய நிலையென்னு மந்தக்கரணத்திலிருப்பதால் அதற்குக் கஷாயமென்று பெயர். மேற்கூறிய இராகத் துவேஷங்களுக்குக் கஷாயமென்று பெயரில்லை. இந்தக் கஷாயம் அந்தக்கரணம் நீங்குகிறவரை நீங்குகிறதில்லை. இதுவே கஷாயத்தின் லக்ஷணமாம்.

## கஷாயம் நீங்குமுபாயமி யாது?

யோகியின் பிரயத்தனத்தால் கஷாயத்தினின்றும் மனோ விருத்தியை எழுப்பி அந்தர்முகமாகவே செலுத்தலாம். இதற்குப் பிரமாணம் :-

வாசிட்டத்தில்

*எங்கேயெங்கே மனமோடி யிளையோரென்ன*
*விழ்ந்தழுந்து*
*மங்கேயங்கே நின்றெழுப்பி யகண்டவறி*
*விலடைவிப்பாய்*

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

## இரஜாஸ் வாதமென்பதென்ன?

லயம், விக்ஷேபம், கஷாயம் இம்மூன்றுமின்றி அப்பியசிக்கப் பட்ட பிரமானுசந்தான வலியால் அடையத்தக்க சவிகற்ப சமாதி யிலுதயமான ஆனந்த அனுபவமாம். அல்லது விக்ஷேப நிவிர்த்தி யிலுதயமான ஆனந்த அனுபவமாம். இந்த ஆனந்த அனுபவமும் சமாதிக்கு விக்கினமென்று கூறியதெதனாலெனில், மைந்தா! இரஜாஸ் வாதமென்னுமானந்த வனுபவம் விகற்பத்தோடு கூடிய



சோபாதிக ஆனந்த அனுபவமாதலால் அதுவே பிரமானந்தமெனக் கருதித் திருப்தியடைந்து விட்டால் அவனுக்கு விருத்தி பிரஹ்மத்தில் லயமாய் விகற்பமற்ற சமாதியும் அதனாலுண்டா வதான நிருபாதிக ஆனந்த அனுபவமும் கிடைக்காமற் போய் விடும், ஆதலால் இதுவும் சமாதிக்கு விக்கினமாம். இதற்கு திருஷ்டாந்தம் ஓர் சர்ப்பத்தால் காக்கப்பட்டுப் பூமியிலிரா நின்ற புதையலை எடுக்க முயன்றவனுக்கு, நெடுநாளாகத் தடையா யிருந்த சர்ப்பம் நீங்கினபோது ஆனந்தமுண்டாகிறது. அப்போது அவன் சர்ப்ப நிவிர்த்தியாலுண்டான ஆனந்தத்தில் திருப்தி யடைந்து, புதையலை எடுக்குமுயற்சியை விட்டுவிடில் புதையற் கிடைத்ததாலுண்டாகும் ஆனந்தங்கிடையாமற் போய்விடும். அதுபோல, அகண்டேகரசமான பிரமானந்தமென்னும் புதையலை எடுப்பதற்குத் தடையாயுள்ள விக்ஷேபமென்னுஞ் சர்ப்ப நிவிர்த்தி யான ஆனந்த அனுபவமாகிய இரஜாஸ்வாதத்திலேயே திருப்தி யடைந்து கொண்டு, ஆனந்த ரூபமான புதையலை அடைவதற்கு முயற்சி செய்யாது விட்டுவிடின் பிரமப் பிராப்தியாலுதயமகா நின்ற பிரமானந்தஞ் சித்தியாதென வரிக.

## இரஜாஸ்வாதத்தை நிவிர்த்திக்கு முபாயமி யாது?

அதிசூட்சுமமாகச் சித்த சலனமில்லாமல் யூகிக்கிற ஆத்ம விவேகத்தினாலும், ஈஸ்வர கிருபையாலும், குரு காருண்யத்தினாலும் நிவிர்த்தியாம். பின் லயம், விக்ஷேபம் கஷாயம், ரஜாஸ்வாதம் என்னும் நான்கு தடைகளுமின்றி அப்பியாசிக்கப்பட்ட பிரமானுசந்தானப் பிரயத்தனத்தால் உண்டாகா நின்ற விகற்பமற்ற நிலையெதுவோ அதுவே நிருவிகற்ப சமாதியாம். இந்நிலையே இராஜயோகத்தின் பிரயோஜனமாம். இவ்வாறு இராஜயோகக் கிரமஞ் சொல்லப்பட்டது.

ஓம்

# அஞ்ஞானம்

## அஞ்ஞானமென்பதென்ன?

ஒன்றையுந் தோற்றுவிக்காமல் மறைப்பதே அஞ்ஞானமாம். இவ்வஞ்ஞானமும் விடயாஞ்ஞானமென்றும் சேதனாஞ் ஞான மென்றுமிரு வகையாம். அவற்றில், பிரஹ்ம சொரூபத்தைத் தவிர மற்ற அனாத்ம பதார்த்தங்களின் லக்ஷணங்களைத் தோற்ற வொட்டாமல் மறைத்துக் கொண்டிருப்பதற்கு விஷய அஞ்ஞான மென்றும், பிரஹ்மத்தைத் தோற்றவொட்டாமல் மறைத்துக் கொண்டிருப்பதற்குச் சேதன அஞ்ஞானமென்றும் பெயர்.

## இந்த அஞ்ஞானமெப்போதுண்டானது?

மைந்தா! அத்வைத சித்தாந்தத்தில் அவித்தையை அனாதி யாக அங்கீகரித்திருக்கின்றனர்.

**அவித்தை**

அஞ்ஞானம், மாயை, தமசு, மனம், சங்கற்பம் இவைகளெல் லாம் ஒரே வஸ்துவின் நாமங்களாம்.

**பிரஹ்மம்**

ஈஸ்வரன், ஜீவன், அவித்தை, அவித்தைக்கும் பிரம்மத்திற்கு முள்ள சம்பந்தம், மேற்கூறிய அனாதி வஸ்துக்களின் வேறுபாடு இவ்வாறுமனாதியாம். யென்றெதனாலங்கீகரிக்கப்பட்டதெனில்,

1. அவித்தைக்குப் பிரஹ்மம் அதிஷ்டானமாயிருப்பதால் அவித்தையினின்றும் பிரஹ்மம் உற்பத்தியானதல்ல. ஈஸ்வராதிகள் பிரஹ்மமின்றிச் சித்திக்காமையால்



ஈஸ்வராதிகளினின்றும் பிரஹ்மமுற்பத்தியானதல்ல. ஆதலால் பிரஹ்மம் அனாதியாம்.

2. பிரஹ்மம் விகாரமற்றதாயிருப்பதால் பிரஹ்மத்தினின்றும் அவித்தை யுற்பத்தியானதல்ல. ஈஸ்வராதிகளின் சித்தி அவித்தையினாதீனமாயிருப்பதனால் ஈஸ்வராதி யினின்றும் அவித்தையுற்பத்தியானதல்ல. ஆதலால் அவித்தை அனாதியாம்.
3. ஜீவேஸ்வரர்கள் கேவலம் பிரஹ்மத்திலாவது மாயை யிலாவது உற்பத்தியாகிறதில்லை. ஈஸ்வரத்தினிடத்தில் ஜீவனாவது ஜீவனிடத்தில் ஈஸ்வரனாவது உற்பத்தியா கிறதில்லை.
4. அவித்தைக்கும் பிரஹ்மத்துக்குமுள்ள சம்பந்தத்தால் ஜீவேஸ்வர பாவங்கள் சித்திக்கின்றன. பிரஹ்மமும் அவித்தையும் மநாதியானமையால் பிரஹ்மத்துக்கும் அவித்தைக்குமுள்ள சம்பந்தமும் அநாதியாம்.
5. பிரஹ்மமும் அவித்தையும் அநாதியானதால்அவைகளின் ஒற்றுமைச் சம்பந்தமுமனாதியாம். ஆதலால் பிரஹ்மம் அவித்தை என்னுமிரண்டின் சம்பந்தத்துக்கும் உற்பத்தி யில்லை. ஆதலின் அவித்யாசேதன சம்பந்தமும் அநாதி யாம். இந்த ஐந்தும் தானே தன்னிடத்தில் உற்பத்தியான தென அங்கீகரிக்கில் ஆத்மா ஸிரயதோஷம் வரும். ஆதலால் தத்தம்மிடத்திலும் தத்தமக்கு உற்பத்தியில்லா மையாலும் அநாதியாம்.
6. பிரஹ்மமாதி ஐந்திற்கும் பேதங்களுண்டு. எதனால் பிரஹ்மமாதி ஐந்திற்கும் பேதங்களில்லையோ அதனால் அவைகளின் பேதங்களுக்கும் உற்பத்தியில்லை. இக் காரணத்தால் ஐந்தின் பேதத்தோடு ஈதொன்றுமாக ஆறுமனாதியாம்.

அவித்தையை அநாதியெனவொப்பிடில் சர்வ ஜீவர்களுக்கும் ஆத்ம ஞானமில்லையேயெனின் ஆறு அநாதியில் முதலாவதான பிரஹ்மமொன்றே வாஸ்தவ அநாதியாம். மற்றைய ஐந்தும் கற்பித அநாதியாம். ஆதலால் அவித்தையும் கயிற்றின் ஞானத்தால் சர்ப்பம் நாசமடைவதுபோல ஆத்ம ஞானத்தால் நாசமாம். இக் காரணங் கொண்டு அவித்தியா நிவிர்த்தியும் ஆத்ம ஞானப் பிராப்தியுங் கூடும். அஞ்ஞானத்தின் லக்ஷணம் ஆத்ம விசாரணை யில் இல்லாமற் போவதே லக்ஷணமாம். இதற்குப் பிரமாணம்,

வாசிட்டத்தில்

*தானலாதானவுடன் முதற்பொருளிற்றானெனும்*
*பாவனையாய்*
*வூனமாமாயை வணர்விலோர் விதிக்க உள்ளதா*
*முணர்வுளோர்க்கிலதாம்*

என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இவ்வஞ்ஞானம் எப்போது நீங்குமெனில், ஞானம் வந்த காலத்து நீங்கும். ஞானமெப்போது வருமெனில் அஞ்ஞான நிவிர்த்தியான காலத்தில் ஞானம் வரும். இந்த இரண்டிலும் எது பிரமாணமெனிலோ இரண்டும் பிரமாணமே. ஏனெனின் ஞானமடையுங் காலமும் அஞ்ஞானமகலுங் காலமும் ஒன்றா யிருப்பதால் இரண்டும் பிரமாணமே.

ஸ்ரீ பகவானும் கீதையில்,

*அஞ்ஞானம் வந்தது அநாதியாம்*
*அதைச் சொல்லுதல் பிரயோஜனமற்றதாம்.*

ஞானம் வந்தால் அஞ்ஞானம் போகுமென்றுஞ் சொல்லி யிருக்கிறார்.



**அஞ்ஞானத்தின் காரியமாவது**

ஞானபுத்திரா! காரணமும் காரியமும் மண்ணும் கடமும் போலவாம். அதுபோல் அஞ்ஞானம் காரணமும் பிரபஞ்சம் காரியமுமாம். காரியமான பிரபஞ்சமுண்டாவதற்குக் காரணம் அஞ்ஞானமெனில், அஞ்ஞானம் ஜட சொரூபமாக விருத்தலின் பிரஹ்மமே பிரபஞ்சத்திற்குக் காரணமோவெனில் பிரஹ்மமு மொருவிதக் காரணந்தான். பிரஹ்மம் உலகத்தைச் சிருஷ்டிக்குங் காரணம் யாதெனில் அவற்றின் காரணத்தை வசிட்டர் இராகவனுக்குச் சொல்லியிருக்கிறார். அதாவது,

*பன்னுகாரணமொன்றில்லை படைக்குமுன் படைக்க*
*வேண்டுமென்னு லீலையினாற்றானே யியைத்தக்*
*காரணமதாகும்.*

ஆதலால், பிரபஞ்சத்திற்கும் அதனுற்பத்திக்கும் பிரஹ்மமே காரணமாம். காரியமான பிரபஞ்சம் சத்தோ அசத்தோ வெனில் அத்தியந்தம அபாவ லக்ஷணமுடையதாம். எதனாலபாவமெனில் காற்றிற்கு உருவமில்லாததுபோல் பிரஹ்மத்தினிடைத்து உலகம் முக்காலத்திலுமில்லையாதலால் அபாவமாம். எந்தப் பதார்த்தம் முன்னும் பின்னுமில்லையோ அந்தப் பதார்த்தம் மத்தியிலு மில்லையாம். பிரபஞ்சமோ சிருஷ்டியினாதியிலும் அந்தத்திலு மில்லையாதலால் மத்தியான இப்போதுமில்லையென்பதாம். இதற்குப் பிரமாணம், தேஜோபிந்து உபநிடதம் நான்காவது அத்தியாயத்தில் இந்தப் பிரபஞ்சம் இல்லவேயில்லை. எப்போது மில்லவேயில்லை என்று கூறப்பட்டிருக்கிறது.

வாசிட்டத்தில்

*மாலதற் குரைப்பானந் தணாவிந்த மண்முதல் யாவையு*
*மனத்தின்*
*பாலுற விருப்பதன்றியே புறத்திற் பயில்வதோர்*
*காலமுமிலதாம்.*

என்றுங் கூறியிருப்பதனால் பிரபஞ்சம் உண்மையில் அத்தியந்தம் அபாவமுடையதாம். இதற்குத் திருஷ்டாந்தம் இரஜ்ஜுவி னிடத்துச் சர்ப்பம் முக்காலத்து மில்லையெனல் பிரத்தியக்ஷமாம். அதுபோல் பிரஹ்மமென்னும் இரஜ்ஜுவினிடத்துப் பிரபஞ்ச மென்னுஞ் சர்ப்பம் முக்காலத்திலுமில்லையாம். இவ்வாறு அஞ்ஞானமும் அதன் காரியமும் சொல்லப்பட்டது.

-: ஓம் தத் சத் :-



ஓம்

# மஹா வாக்கியம்

## மஹா வாக்கியமாவதென்ன? எத்தனை வகைப்படும்? அனுஷ்டிக்குங் கிரமம் யாது?

மஹா வாக்கியமாவது பிரஹ்மத்தை நேரே அறிவிக்கும் வாக்கியமாம். அதாவது ருக் வேதம், ஐதரேய உபநிடத்தில் (பிரஞ்ஞானம் பிரஹ்மம்) எனவும் யஜுர் வேதத்தின் தைத்திரிய உபநிடத்தில் (அஹம் பிரஹம்மாஸ்மி) எனவும் சாம வேதத்தின் சாந்தோக்ய உபநிடத்தில் (தத்துவமஸி) எனவும் அதர்வண வேதத்தின் முண்டகோபநிடத்தில் (அயமாத்மா பிரஹ்மம்) எனவும் கூறப்படும் மஹா வாக்கியம் நான்காம். இந்நான்கில் முதல் வாக்கியம் பிரஹ்மத்தின் லக்ஷண வாக்கியமாம். இரண்டாவது வாக்கியம் பிரஹ்மத்தை யடையும் அப்பியாச வாக்கியமாம். மூன்றாவது வாக்கியம் பிரஹ்மத்தின் உபதேச வாக்கியமாம். நான்காவது வாக்கியம் பிரஹ்மத்தின் அனுபவ வாக்கியமாம். இந்நான்கு வாக்கியங்களுள் மூன்றாவதான தத்வமஸி மஹா வாக்கியமே ஆசாரியர் மூலமாகச் சிரவணஞ் செய்யத் தக்கதாம். ஆத்மாவை விசாரிக்குஞ் சாதன வாக்கியமாம். அதாவது தத்பதம், துவம்பதம், அஸிபதம் என்னும் மூன்று பதங்களில் அத்வைதிகள் கூறுந் தாத்பரியமாவது தத்பதத்துக்கு வாச்சியார்த்தம் ஈஸ்வரனும் லக்ஷியார்த்தம் பிரஹ்மமுமாம். துவம்பதத்துக்கு வாச்சியார்த்தம் ஜீவனும் லக்ஷியார்த்தம் கூடஸ்தனுமாம். இவ்விரண்டின் வாச்சிய ரூபமான ஜீவேஸ்வரர் களுக்கு ஐக்கியம் கூடாது. லக்ஷிய ரூபமான கூடஸ்தப் பிரஹ்மர்களுக்கு ஐக்கியம் கூடும். அவ்வைக்கியத்தை யறிவிக்கும் பதம் அஸியென்பதாம்.

## மஹா வாக்கிய விசாரணையாவது

முதலாவது துவம்பத சோதனம்

அதாவது அன்ன மயம், பிராண மயம், மனோ மயம், விஞ்ஞான மயம், ஆனந்த மயம் என்னுமைந்து கோசங்களையுந் தன் மனோவிருத்தினாற்றள்ளி அப்பாலுள்ள சூனியப் பிரதீதியையுமகற்றி அவற்றிற்குஞ் சாக்ஷியே நான் என்று பிரத்தியக்ஷமாயரியும் வரை துவம்பத சோதனமாம். இதில் அன்னமயமாவது ஷட்கோச விகாரமான தூல சரீரமாம். இந்தச் சரீரம் ஆத்மாவல்லவென்பதற்குச் சுருதி யுக்தி அனுபவப் பிரமாணங்கள்.

*என்னுடைய புத்தியினா லெண்ணினே*
*னிச்சக நானல்ல மல வுடனானல்ல*

என்று வாசிட்டத்திலும்

*இடையுறு மென்பினை நரம்பினார் த்திடா*
*புடையிறு மிறைச்சியாற் பொதிந்து போக்கற*
*மிடைதரு தோலினால் வேயப் பட்டதோ*
*ருடலினை யானென வுரைக்க வொண்ணுமோ.*

என்று பாகவதத்திலும்,

*திரிசியமாய்ச் சிதைகின்ற வுடனானல்ல வென்று*

ரிபு கீதையிலும்,

*பிரிவதெப்படி யென்றக்காற் பிணமாகு முடனா*
*னென்று மறிவினைக் கொல்லல் வேண்டும்.*

என்று கைவல்ய நவநீதத்திலும் இன்னும் பற்பல சுருதிகளும் பிரமாணமாம்.



சுருதிகளில் ஆத்மா சச்சிதானந்த லக்ஷணங்களோடு கூடிய தென்று கூறியிருப்பதால் தூல சரீரமாத்மாவல்லவென்பதற்கு யுக்தியினாலும் அன்னியமாயிரா நின்ற வஸ்திரத்தை என் வஸ்திரமென்பது போல வியஷ்டியாக என் தலை, என் மார்பு, என் கை, என் கால் என்பதும் சமஷ்டியாக என் சரீரமென்பதுமான அனுபவத்தினாலும் அன்னமய கோசம் ஆத்மாவல்லவாம்.

பிராணமய கோசமாவது

வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபஸ்தம் என்னுமைந்து கருமேந்திரியங்களுடன் பிராணனுஞ் சேர்ந்து பிராணமய கோசமாம். இந்தப் பிராணமய கோசமு மாத்மாவல்ல வென்பதற்குச் சுருதி யுக்தி அனுபவங்களாவன.

*பிறிவு பெருநானாவா முயிர் நானல்ல.*

என்று ரிபு கீதையும்,

*உன்னிய வாயுவைப் போலுள்ளிலும் வெளியிலும்போ*
*யின்னதின் விகாரமாகி யெங்குமே யிட்டா நிட்டம்*
*அன்னியந்தன தீதென்ன வணுவுமேமறியா தத்தாற்*
*பின்னரும் பரவசத்தாற் பேணுமீன் தான்மாவாகா.*

என்று விவேக சூடாமணியிலும்,

*பிராணனு மல்லதுஞ்சி லறிவின் மையால்*

என்று சசிவர்ண போதத்திலும்

*ஊசு முடலிலுழல்கின்ற காற்றையுணர் வென்பனோ*
*வீசும் பிராணனை யான்மாவல்ல வேன்றுவேதஞ்*
*சொல்லும்*
*பேசு மனிதர் பொருளறியாமற் பிதற்றுவரே.*

என்று அறிவானந்த சித்தியாரிலும் சொல்லப்பட்டிருக்கிறதே சுருதி பிரமாணமாம்.

வீட்டிற்குள்ளிருக்கும் குழந்தை வெளியே போதலும் உள்ளே திரும்பி வருதலுமான செய்தியை அறிந்து கொண்டிருக்கும் பிதாவானவன் அக்குழந்தைக்கு அன்னியமாகவிருப்பதுபோல பிராணனும் இருதயத்திலிருந்து நாசி மார்க்கமாக வெளியே போதலும் வருவதலுமாக இருப்பதையறிந்து கொண்டிரா நின்ற ஆத்மாவுக்குப் பிராணன் அன்னியமென்பது யுக்திப் பிரமாணமாம். என் மைந்தன், என் வீடு என்பதுபோல் என் பிராணன் என் வாக்கு என்பது அனுபவப் பிரமாணமாம்.

**மனோமய கோசமாவது**

சுரோத்திரம், துவக்கு, சக்ஷு, சிங்குவை, ஆக்கிராணம் என்னும் ஞானேந்திரயங்களைந்துடன் சங்கற்ப விகற்ப பேதத்தோடு கூடிய மனதும் சேர்ந்து மனோமய கோசமாம். இந்த மனோமய கோசமுமாத்மாவல்லவென்பதற்கு சுருதி யுக்தி அனுபவப் பிரமாணங்களாவன.

*பிறந்து நசிக்கின்ற மனமுதல் நானல்ல*

என்று ரிபு கீதையிலும்,

*பரவியே ஓடுங்கலாலும் பரிணாமியாதலாலும்*
*விரிதுயர் வடிவதாலும் விடயமாந் தன்மையாலும்*
*உரைமனோ மயகோசசந் தானுணர்வுரு வான்மாவாகா.*

என்று விவேக சூடாமணியிலும்,

*காரணமா மனதுபுத்தி கருத்தாவாம வையான்மாவோ*

என்று கைவல்ய நவநீதத்திலும்,



*இனமுற வெண்ணமுற்ற கரணத்திலொன்றி தெனலாலி*
*தென்ன தெனலால் மனமுற்ற மன்னவென் றதனாலுமல்ல*

என்று சசிவர்ண போதத்திலும் கூறப்பட்டிருப்பதால் மனோமய கோசம் ஆத்மாவல்லவென்பதற்குச் சுருதிப் பிரமாணமாம். தீபத்தை பார்க்கின்றக் கண்ணுக்குத் தீபமன்னியமாவதுபோல விடயாகாரமாக மேலுக்கு மேலுமுதியா நின்ற மனதை அறிந்து கொண்டிரா நின்ற ஆத்மாவுக்கு மனது அன்னியமென்பது யுக்திப் பிரமாணமாம். அன்னியமாகிய மனைவி மக்களை என் மனைவி, என் மக்கள் என்பதுபோல என் மனம், என் செவி என்பதனால் மனோமய கோசமும் ஆத்மாவல்லவென்பது அனுபவத் தினாலுஞ் சித்தமாம்.

**விஞ்ஞானமய கோசமாவது**

நிச்சய ரூபமான புத்தியும் ஞானேந்திரியமுங் கூடி விஞ்ஞான மய கோசமாம். இவ்விஞ்ஞானமய கோசமும் ஆத்மாவல்லவென் பதற்குச் சுருதி யுக்தி அனுபவங்களாவன :-

*துன்னு பொறிகளுமல்ல மனமுமல்ல*
*தொடர் புத்தியல்ல வகங்கார மல்ல*

என்று வாசிட்டத்திலும்,

*இனமுற வெண்ணவுள்ள கரணத்திலொன்றிதென லாலி*
*தென்னதெனலால் மனமுனமன்ன வென்றவத*
*னாலுமல்ல மதியல்ல வந்தவகையே.*

என்று சசிவர்ண போதத்திலும்,

*ஓதும் விஞ்ஞானகோச முண்மையா மான்மாவாகா*

என்று விவேக சூடாமணியிலும் விஞ்ஞானமய கோசமாத்மா வல்ல வென்பதற்குச் சுருதிப் பிரமாணமாம். சூரியப் பிரதி

பிம்பத்தைப் பொருத்தி ஆந்தரக்கிரகத்தை விளக்குவிக்கின்ற தர்ப்பணத்தைப் பிரகாசிப்பிக்கின்ற பிம்ப சூரியனுக்கு அத் தர்ப்பணம் அன்னியமென்பதுபோல ஆத்மபிரதி பிம்பத்தைப் பொருத்தி விஷயங்களை விளக்குவிக்கின்ற விஞ்ஞான மய கோசத்தையறிந்து கொண்டிராநின்ற ஆத்மாவுக்கு விஞ்ஞானம் அன்னியமென்னல் யுக்திப் பிரமாணமாம். அன்னியமயமாகிய மனைவி, மைந்தராதியர்களை என் மனைவி, என் புத்திராதிய ரென்பதுபோல என் புத்தி, என் செவி, என் கண் என்பதனால் விஞ்ஞானமய கோசம் ஆத்மாவல்ல வென்பதற்கு அனுபவப் பிரமாணமாம்.

**ஆனந்தமய கோசமாவது**

காரண சரீரமான அவித்தையே ஆனந்தமய கோசம். இந்த ஆனந்தமய கோசமும் ஆத்மாவல்ல வென்பதற்குச் சுருதி யுக்தி அனுபவங்களாவன,

*இருள்வடிவா மஞ்ஞான வருநானல்ல*

என்று ரிபு கீதையிலும்,

*வரமறு துயிலானந்த மயனையு நானென்னாதே*
*விரவிய தமவஞ்ஞான விருத்தியின் விகாரமாமே.*

என்று கைவல்ய நவநீதத்திலும்,

*காரண சூக்கும தூல மூன்றுங்*
*கண்டறியி லன்னியமாயிருக்கையாலே.*

என்று பரமானந்த தீபத்திலும்,

*பரவுசோபாதியாலும் பகுதியின் விகாரத்தாலும்*
*கருதிய புண்ணியத்தின் காரியமாதலாலும்*
*தரமுறும் விகாரக் கூட்டந்தன்னி லுட்பட்டதாலும்*
*மருவு மானந்தகோச மாசிலாவான் மாவாகா.*



என்று விவேக சூடாமணியிலும் சொல்லப்பட்டிருக்கிறதே சுருதிப் பிரமாணமாம்.

சூரியனை மறைத்திருக்கின்ற மேகம் அதனை விளக்கி வைத்துக் கொண்டிராநின்ற சூரியனுக்கன்னியமென்பதுபோல ஆத்மாவை மறைத்துக் கொண்டிருக்கின்ற ஆனந்தமய கோசம் அதனைச் சாக்ஷிமாத்திரமாயறிந்து கொண்டிராநின்ற ஆத்மாவுக்கு அன்னியமென்பது யுக்தமாம். கூபம், குளம், வனம் முதலியவற்றை என் கூபம், என் குளம், என் வனம் என்பதுபோல என் அஞ்ஞானம் என் ஜீவன், என் பிரியமென்பதனால் ஆனந்தமய கோசம் ஆத்மாவல்ல வென்பதற்கு அனுபவப் பிரமாணமாம்.

மேற்கூறிய ஐந்து கோசங்களும் சச்சிதானந்த லக்ஷணங் களோடு கூடிய ஆத்மாவல்லவென்று சுருதி யுக்தி அனுபவங் களால் நிரூபிக்கப்பட்டது. இவ்விதமான பஞ்சகோசங்களையுந் தன் மனோவிருத்தியினாலகற்றி அப்பாலுற்ற சூனியப் பிரதீதியை யுந்தள்ளி இவையெல்லாவற்றிற்குஞ் சாக்ஷிசொரூபமாயுள்ள கூடஸ்தனே நானென்று பிரத்தியக்ஷமாயறியும் வரை (தத்துவமஸி) மஹா வாக்கியத்தின் துவம்பத லக்ஷியார்த்த பதமாகிய கூடஸ்த தரிசனமாம். இதுவே துவம்பத சோதனையாம். இதற்குள் ஜீவ தரிசனமும் அடங்குவதாம்.

**தத்பத விசாரணையாவது**

பஞ்ச கோசங்களையும் தாண்டி அப்பாலுற்ற சூனியத்தையு மகற்றி அப்பாலுள்ள கூடஸ்த தரிசனமும் செய்தபின் கூடஸ்தனாகிய நானே தற்பத லக்ஷியார்த்தமாகிய பிரஹ்மம் பிரஹ்மமே நான் என்னும் மஹா வாக்கியார்த்த நிச்சயத்தைக் கொண்டு ஈஸ்வர தரிசனஞ் செய்து, பின் பிரஹ்ம தரிசனஞ் செய்வதாம். அதாவது ஜீவப் பிரஹ்ம ஐக்கியத்தை அடைவதாம். இதுவே தத்துவமஸி மஹா வாக்கியத்தின் முடிவாம். இவற்றை

பிரஹ்ம நிஷ்ட பண்டிதராகிய சற்குரு மூர்த்தியினிடம் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து கொள்ள வேண்டுமேத் தவிர புத்தகங்களைப் படித்தவுடன் தானே அடைவது முடியாத விஷயமாம். பின்னே சுருதி, குரு, அனுபவம் இம்மூன்றின் சகாயத்தினால் அடைய வேண்டுவதாம். இதற்குப் பிரமாணம்,

*திகழ்மனம் போய்த் தத்பதத்தை தெளியுமட்டுந்*
*தேசிகனூற் சொல்வழியிற் செல்லுவாயே.*

என்று வாசிட்டதிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

மஹா வாக்கிய விசாரணையொன்றே ஞானத்துக்கு நேரே சாதனமாம். மற்ற அன்னிய சாதனங்களெல்லாம் பரம்பரையான சாதனங்களாம். ஆத்ம விசாரணையன்றிக் கேவலம் யோகம், கருமம் முதலிய உபாயங்களால் ஞானமடைதல் முடியாதாம். இதற்குப் பிரமாணம்,

**வாசிட்டத்தில்**

*பேசியதன் விசாரத்தாற் சனகர்பிரான் பேரும்பெறு*
*பெற்றதல்லால்*
*வாசியுள மற்றொன்றால் வந்தல்ல வாரிசமலர்க்*
*கண்மாலே.*

என்றும்

*இன்னவாறந்தப் பிரமத்தையறிவிக்கு மிலக்கணத்தால்*
*வேதஞ் சொன்ன ஞானமும் விசாரத்தால் வருமின்றிச்*
*சுருதி நூல் படித்தாலும் அன்னதானங் கடவங்கள்*
*மந்திரங்களா சாரங்களியாகங்க ளென்ன செய்யினுந்*
*தன்னைத் தானறி கின்றதிவைகளால் வாராதே.*

என்று கைவல்ய நவநீதத்திலும் கூறப்பட்டிருக்கிறது.



பின்னும் துவம்பத சோதனம் ஏன் செய்தல் வேண்டு மெனிலோ ஆத்மாவை யரிய வேண்டுமாயின் ஆத்மாவல்லாத அனாத்மாக்களை விசாரித்துத் தள்ளாமல் அறிய முடியாது. ஆதலால் ஆத்மாவாகிய தன்னையறியு நிமித்தம் அதாவது, தானே அதுவாகு நிமித்தம் துவம்பத விசாரணை அவசியம் வேண்டுமாம். இம்மஹா வாக்கியத்திற்கு வைஷ்ணவர்களாகிய விசிட்டாத்துவைதிகளும் மத்துவர்களாகிய துவைதிகளும் வேறுவிதமாகத் தாற்பரியஞ் செய்திருக்கின்றனர். அதாவது,

**விசிட்டாத்துவைதிகளபிப் பிராயமாவது**

விசிட்டம் - விசேஷணங்களோடு கூடியது. அத்வைதம் இரண்டற்று ஒன்றாயிருப்பது. ஒரே பதார்த்தம் வருணம் முதலாகிய குணங்களில் சேர்ந்துள்ளதாய் வேறுபடாமலிருப்பதுபோல பரமாத்மாவானது சித்து அசித்துக்களாகிய விசேஷணங்கள் சேர்ந்துள்ளதாய்ப் பிரிவுபடாமல் ஒன்றாயிருக்கின்ற தென்னுங் கொள்கை. இவ்விசிட்டாத்துவைத நூல்கள் பரமாத்மா, சித்து, அசித்து என்னும் மூன்று தத்துவங்களில் பரமாத்மா என்பது பிரஹ்மம். அதுவொன்றே சத்தியம். மற்றவைகள் அதை ஆசிரைத்துள்ள சத்திய தத்துவங்கள். இந்தத் தத்துவங்களில் சித்தென்பது ஜீவாத்மா. அசித்தென்பது மூலப் பிரகிருதி. மண் கடத்திற்கு உபாதான காரணமாயிருப்பதுபோல மூலப் பிரகிருதியே பிரம்மாண்ட சிருஷ்டிக்கு உபாதான காரணம் சித்த சித்துக்கள் பரமாத்துமாவுக்குச் சரீரங்கள் பரமாத்மா சரீரி எனவும் சொல்லப்படுகிறது.

பின்னும் தத்துவத் திரயங்களில் 1. யதார்த்த ஞானம் 2. ஆசாரியர் சரீரத்திற் பிரீதி 3. வேதங்களினிடத்தில் பக்தி 4. மோக்ஷத்தில் தீவிர இச்சை 5. விஷயங்களில் வைராக்கியம் அதாவது வெறுப்பு 6. கருமத்தில் ஆசக்தி 7. வேதாந்த அப்பியாசம். இந்த ஏழுவித நியமங்களும் மோக்ஷமடைதற்குரிய

அதிகாரிகள் அனுஷ்டிக்க வேண்டிய சாதனங்கள். கருமயோகம், ஞானயோகம், பக்தியோகம், பிரபத்தி ஆகிய இவைகள் மோக்ஷமடைவதற்கு உபாயங்களெனவும்.

மோக்ஷமானது கைவல்ய மோக்ஷம், பிரஹ்மானந்த மோக்ஷம் என இருவகையாம். இவ்விரண்டில் ஜீவன் தன்னுடைய வாஸ்தவ ஸ்திதியிலிருந்து கொண்டு ஆனந்தத்தை அனுபவிப்பது கைவல்ய மோக்ஷமெனவும், இதையடைந்தவன் பிரகிருதி மண்டலத்தில் வெளியில் விரஜா நதிக்கு இக்கரையில் இருப்பதாகவும், முக்தர்களுடையும் வைகுண்ட லோகத்தை யடைகிறான். அடைந்தாலும் பரமாத்மா சமீபத்திற்குப் போகிற தில்லை. வைகுண்டத்தில் பரைச்சேரிக்கொப்பான ஓர் மூலையி லிருக்கிறானென்றும், ஜீவன் வைகுண்டத்தில் பரமாத்மாவுக்குச் சமீபமாகச் சென்று பரமாத்மாவின் தருமமாகிப் பிரமானந்தத்தை அனுபவித்தல் பிரமானந்த மோக்ஷமாம். ஜீவன் பிரஹ்மத்தில் லயமடைகிறதில்லை. சாலோக, சாமீப, சாரூச, சாயுச்யங்களை அடைகிறானென்றுங் கூறுவர். மேற்கூறிய விசிட்டாத்துவைதிகள் தத்துவமஸி வாக்கியத்திற்குக் கூறும் பொருளாவன. தத் என்னும் பதம் தஸ்யா என்றும், துவம் என்னும் பதம் பாவா என்றும், அஸி ஆகத் தத்துவமஸி எனவும் இதன் பொருள். தஸ்யா - பிரமஹ்த்தின், பாவா - தருமமாக, அஸி - ஆனாய். அதாவது, பிரஹ்மத்தின் தருமமாக ஆனாய் எனவும் பொருள் கொண்டிருக்கிறார்கள். விசிட்டாத்துவைதிகள் பொருள் கொள்வதுபோல அத்வைதிகளும் பொருள் கொள்ளில் சுருதிக்கு விரோதமாம். எப்படியெனில், பிரஹ்மத்தைத் தருமமாதிய விஷேணங்களுடையதென்பதும் ஆத்மாவைத் தருமியேயன்றி ஓர் பொருளாக நிறைபெறாத தர்மமாகக் கொள்ளுதலும் நிர்க்குண நிரம்ச நிர்விசேஷ லக்ஷணமுள்ளது பிரஹ்மமெனவும் அதுவே சத்தாகிய ஆன்மாவெனவும் போதிப்பதாகிய வேத வாக்கியங்களுக்கு விரோதமாம்.



**துவைத சித்தாந்தமாவது**

திவ்விய கல்யாண குண சம்பன்னனான விஷ்ணுவே பிரஹ்மம். இவ்விஷ்ணுவே ஜடப் பிரகிருதியிலிருந்தும் உலகத்தை சிருட்டித்தமையால் உலகத்திற்கு விஷ்ணுவே நிமித்த காரணம். ஜடப் பிரகிருதி உபாதான காரணம். விஷ்ணு, ஜீவன், பிரகிருதி மூன்றும் நித்தியம். நாசமற்ற இம்மூன்றுந் தனித்தனியே சத்தியமாம். இவை மூன்று தத்துவங்களும் ஒன்றுக்கொன்று வேறானவைகளென்னும் கொள்கையாம். இந்தத் துவைதிகள் கூறுவது பிரகிருதியும் ஜீவனும் விஷ்ணுவின் ஆளுகைக்குட்பட்டவர்கள். பிரகிருதியின் சாத்வீக, இராஜச, தாமசமென்னும் முக்குணங்களால் ஜீவன் கட்டுப்பட்டு அதனால் ஜனன, மரண துன்பங்களுக்கு உட்படுகிறானென்றும் மோக்ஷத் திற்குச் சாதனம் விஷ்ணுவின் பக்தியே எனவும் இவ்விதமான விஷ்ணுவின் பக்தியால் விஷ்ணுவின் பிரகாசத்தையடைந்து அதனால் கருமம் முடியும்போது மேலான விஷ்ணுவைப் போலிருப்பதான மோக்ஷத்தையடைகிறானென்றுங் கூறுவர்.

இத்துவைதிகள் தத்துவமஸி வாக்கியத்திற்கு எங்ஙனம் பொருள் கொண்டிருக்கிறார்களெனில், ததிவாதுவம் அஸி என்பது தத்துவமஸி என்றும் இதற்குப் பொருள் தத் என்பது பரம், இவா என்பது - போல, துவம் என்பது - நீ, அஸி என்பது - ஆனாய், அதாவது பரம்போல நீ ஆனாய் எனவுங் கூறுவர். இத்துவைத வாதிகள் கூறும் பொருள்போல அத்வைதிகளும் பொருள் கொள்ளில் சுருதிக்கு விரோதமாம். ஏனெனில், மேலாகிய பிரஹ்மத்தைப் போல ஜீவனாகிய நீ ஆனாய் எனில் ஜீவர்கள் அநேகர்களான படியால் அநேக ஜீவர்களும் சமசத்தையுடைய பிரஹ்மங்களாகி ஒன்றிருந்தவிடத்து மற்றொன்றிராமல் பரிசின்ன வஸ்துக்களேயாகும். அங்ஙனமாயின் பிரஹ்மத்தை அத்வைதம், அகண்டம், அபரிச்சின்னம் என்று கூறும் வேத வாக்கியங்களுக்கு

விரோதமாம். ஆதலால் யதார்த்த பிரஹ்ம நிஷ்ட பண்டிதராகிய சற்குருவினிடம் மஹா வாக்கியங்களின் தாற்பரியங்களை செவ்வையாய்த் தெளிந்து, ஆத்மா அநாத்ம விசாரணை செய்து அநாத்மாக்களை யகற்றி, ஆத்மாவையடைய வேண்டுவது. அதாவது ஆத்மாவான பிரஹ்மமே தானாவது. இவ்விதமாக மஹா வாக்கியத்தின் கிரமபேரதனஞ் சொல்லப்பட்டது.

-: ஓம் தத் சத் :-



ஓம்

# குரு லக்ஷணம்

## குருவின் லக்ஷணமென்ன?

குகாரம் - அஞ்ஞானம். ருகாரம் - ஞானமாம்; இவற்றில் குகாரமென்னுமஞ்ஞானத்தை ருகாரமென்னும் ஞானத்தால் நிவிரித்தி செய்விப்பவரெவரோ அவரே குருவெனப்படுவர். அல்லது பிரஹ்மத்தைத் தவிர அன்னியமல்லாத அஞ் ஞானத்தைப் போக்குவித்து, ஆத்ம ஞானத்தையடைவிக்குஞ் சக்தி யாரிடத்துண்டோ அத்தகையரே குருவெனப்படுவர். பின்னும் அஞ்ஞான தசையில் சத்தியமாகத் தோற்றப்பெற்ற இந்த உலகம் நித்தியமல்ல உலகத்தின் அதிஷ்டான சைதன்யமான பிரஹ்மத்தைத் திரிசியமற்ற திருக்கு சொரூபமாக வேதாந்த மஹா வாக்கியங்களினால் ஜீவப் பிரஹ்ம ஐக்கியத்தை அடைவிக்கும் சக்தி யாருக்குண்டோ அத்தகையரும் தன்னால் பார்க்கப்பட்ட சர்வதிரிசியங்களும் பிரஹ்மமாய்த் தோற்றும்படி அபரோக்ஷமாக அறிவிக்கும் ஆற்றலுடையவரும், மழையானது பிரதியுபகாரத்தை யிச்சியாமல் வருஷிப்பதுபோல பிரதிஉபகாரங் களை இச்சியாமல் ஜீவகாருண்ய நிமித்தமாக உபதேசம் முதலான காரியங்களைச் செய்யப்பட்டவரும் கன்மகாண்டிகள் உபாசனா காண்டிகள் வரின் அவரவர் அந்தக்கரண பாவத்துக்குத் தகுந்தவாறு போதிக்குந் தன்மை வாய்ந்தவரும், காரியப் பிரஹ்மத்தின் தன்மையை விலக்கிக் காரணப் பிரஹ்மத்தின் அடைவை அடைவிப்பவரும் சாதன சதுட்டய சன்மார்க்கர் களாயும், மல விக்ஷேப தோஷ ரகிதமான அந்தக்கரண சுத்தி யுடையவர்களுக்குப் பிரமஞானத்தைப் போதிப்பவரும் இத்தகைய அதிக அபாரமான சக்தி வாய்ந்தவரெவரோ அவரே குருவெனப் படுவர்.

பின்னும் அதிதீவிரதரமான சிஷ்யர்களுக்குக் கால நியமமின்றிப் போதிப்பவரும், நித்திரை, சோம்பல், சந்தேகம் முதலிய பிரதிபந்தங்களின்றி புத்தி தெளிவாயிருக்குங் காலங் களில் சிஷ்யர்களுக்கு வேதார்த்தங்களை உள்ளமைத்துக் கொண்டு விரைதலும் வெகுளலுமின்றி முகமலர்ச்சியுடைய வராய்ச் சந்தேக விபரீதங்களின்றித் தெளிவு பொருந்திய சுருதி யுக்தி பூர்வமாகப் போதிப்பவரும் வேதாந்த சாஸ்திரங்களின் அந்தரங்க அபிப்பிராயங்களை நன்றாயரிந்தவரும் பிரஹ்ம சாக்ஷாத்காரத்தை அடைந்தவருமான இவ்வித லக்ஷணங்களோடு கூடியவரெவரோ அவரே குருவெனப்படுவர்.

## மேற்கூறிய லக்ஷணங்களோடு கூடிய சற்குருமார்கள் சன்னியாசிகளா அல்லது கிரகஸ்தர்களா?

சந்நியாசிகளும் கிரகஸ்தர்களுமாகலாம் ஜனகன், யாக்ஞவல்கியர், உத்தாலகர், வசிஷ்டர் முதலிய முக்தர்கள் கிரகஸ்தர்களாகவே இருந்திருப்பதால் குருமார்கள் கிரகஸ்தர்களாக வுமிருக்கலாம். குருவின் தரிசனத்தால் திருஷ்டபலம் அதிர்ஷ்ட பலம் என்னுமிரண்டு வகைப் பலன்களுஞ் சித்திக்கின்றன. அதாவது நிஷ்காம கருமோபாசனைகளாற் சித்திக்கக் கூடிய சித்த சுத்தி அதிர்ஷ்ட பலமாம். நேரே ஞானோபதேசம் திருஷ்ட பலமாம். குருவின் தரிசனத்தால் அதிர்ஷ்ட பலமுஞ் சித்திக் கின்றன. ஈஸ்வர தரிசனத்தால் அதிருஷ்டபலமான சித்த சுத்தி மாத்திரஞ் சித்திக்கின்றன. சித்தித்தாலும் ஜனகாதியர்களுக்கும் மாணிக்கவாசகருக்கும் ஈஸ்வரரே ஞானோபதேசஞ் செய்ததாகச் சொல்லியிருக்கின்றதேயெனில் அவ்வீஸ்வரனும் கல்லாலடியி லும் குருந்தமரத்தடியிலுமாக இருந்து உபதேசித்ததாகவும் புராணங்கள் கூறுகின்றபடியால் குரு உபதேசித்ததேயாம். ஆதலால் ஈஸ்வர தரிசனத்தால் அதிருஷ்ட பலமும், குரு தரிசனத்தால் அதிருஷ்ட பலமும், திருஷ்ட பலமும் ஆ



இரண்டு பலமும் சித்திக்கின்றன வாதலால் மோக்ஷமடைய இச்சை கொள்ளும் முமுக்ஷுக்கள் யாவரும் குருவையடைய வேண்டுமென்னும் பக்தி சிரத்தையுடன் தரிசித்து அனுஷ்டானஞ் செய்து பரமானந்த சொரூபமான மோக்ஷத்தை அடையக் கடவர்கள். இவ்விதமாகக் குருவின் லக்ஷணம் சொல்லப்பட்டது.

-: ஓம் தத் சத் :-

ஓம்

# சிஷ்ய லக்ஷணம்

## சிஷ்ய லக்ஷணமாவது யாது?

நித்தியாநித்தியவஸ்து விவேகம் இகமுத்திரார்த்தபரபோக விராகம் சமாதி சட்கசம் பத்தி முமூக்ஷுத்துவம் என்னும் நான்கு சாதனங்களையும் ஏது சொரூபம் காரியம் அவதி இவற்றிலேதேனுமோர் பரியந்தமடைந்தவனாயும் மலவிக்ஷேப தோஷங்கள் நீங்கி ஆவரண தோஷமாத்திரம் மிஞ்சியிருக்கின்ற அந்தக்கரணத்தோடு கூடியவனெவனோ அவனே சிஷ்யனாம்.

## இத்தகைய சிஷ்யன் செய்யத் தக்கது யாது?

ஆவரண தோஷம் நீங்கும் பொருட்டு ஜீவப் பிரஹ்ம ஐக்கியத்தைப் போதிக்கும் பிரஹ்ம நிஷ்டராகிய சற்குருவை யடைய வேண்டியதேயாம்.

### குருவையடையுங் கிரமமாவது

வேடன் வலையிலகப்பட்டு, அவ்வலையைக் கிழித்துக் கொண்டு ஓடாநின்ற மானனாது, பின்னும் வேடர்கள் வசிக்குங் கிராமங்களையும் புலி முதலான மிருகங்கள் வசிக்கும் மலைக் குகை பெருங்காடு முதலியவைகளையுமிச்சியாமல் பயமற்றதா யுள்ள காடுகளை நாடிச் செல்வதுபோல ஜனன, மரண துக்கங் களுக்குப் பயந்து ஸ்தீரி, புத்திரன், தனம் முதலியவைகளிலிச்சை யற்று வெளிப்பட்ட முமூக்ஷுவானவன். இதற்குப் பிரமாணம்:

கைவல்ய நவநீதத்தில்

*ஆனபின் மனைவிமக்களர்த்த வேடனைக் கண்மூன்றிற்*



*கானவர் வலையிற்பட்டுக்கை தப்பியோடுமான் போற்*
*போனவன்*

என்றியம்பப்பட்டிருக்கிறது.

பந்தத்திற்கேதுவான ஸ்திரீகளையும், புத்திரன் தனம் முதலான அனித்திய வஸ்துக்களையும் உலோகாயதர் முதலான பேதவாதிகள் கூட்டங்களையும் ஜன்ம ஏதுவான சரியை கிரியைகளையே போதிப்பவரும் பூச்சியத்தன்மை செல்வம் புகழ் இவைகளின் நிமித்தமாக வேதாந்த சாஸ்திரங்களைப் போதிப்பவராகிய ஆசாரியர்களல்லாத அனாசாரியர்களை நாடாமல் பிரதிப் பிரயோஜனங்களை விரும்பாமல் கிருபாநிமித்தம் ஞானசாஸ்திர அந்தரங்க அபிப்பிராயங்களையும் பிரஹ்ம நிஷ்டா சாதனமார்க்கங்களையும், அனுக்கிரகஞ் செய்பவரும் கல்வி, அறிவு, அடக்கம், வைராக்கியம், ஜீவகாருண்யம் இவைகள் உள்ளவராயும் பிரஹ்மஞானியாயும் உள்ள ஸ்ரீ பரமாச்சாரியரைத் தரித்து மனதில் அளவற்ற ஆத்திரமும் ஆனந்தமும் வாக்கினால் மிகுதியான தோத்திரமும் கரத்தில் ஆராதனைக்குரிய பத்திர புஷ்ப பலாதிகளோடு அதிவிரைவாக அருகிற் சென்று, அவருடைய திருவடியைத் தரிசித்து, இரண்டு பாதங்களிலும் புஷ்பங்களினாலருச்சித்து, இரு கரங்களையுஞ் சிரசின் மீது குவித்துப் பலதரம் வலம் வந்து, சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து வாக்கினாற்றுதித்து, மனதினாற்றியானித்து, ஆனந்த பரவசமா யிருப்பது குருவையடையுங் கிரமமாம். குருவையடைந்த பின் செய்ய வேண்டியதென்னவெனில், பெரிய நோயினால் துன்பப் படுவன் அந்த நோயை தீர்க்கவல்ல வைத்தியர்பாற் சென்று தன் நோயை நிவிர்த்தி செய்விக்க வேண்டுமென்று மதுரமான வசனங்களாற் கூறிப் பொருள்களைக் கொடுத்து அவருக்கு உபசாரஞ் செய்து கொண்டிருப்பதுபோலச் சம்சார பந்தமென்னும் வியாதியை நிவிர்த்திப்பிக்க வல்லமை வாய்ந்த சற்குருவின் சந்நிதானத்தில் தண்டாகாரமாக நமஸ்கரித்தெழுந்து, இருகை

குவித்து நின்று, "கருணாநிதியாகிய எனது சற்குருவே! ஓ ஸ்வாமி! ஓ பகவானே! நான் யார்? இந்த உலகம் யாது? இது யாரையுடையது. எனக்கு ஜனன, மரண சம்சாரபந்தம் வந்த வாறேது? இது எதனால் நீங்கும்? என்பதை அடியேனுக்கு அனுக் கிரகஞ் செய்ய வேண்டும்" என்று சமயம் நேர்ந்தபோது அடிக்கடி விண்ணப்பித்துத் தன்னுடைய திரவியம், சரீரம், மனது வாக்கு, இவைகளைப் பாததக்ஷணையாக அர்ப்பணஞ் செய்து, குரு பரிவாத நிந்தையின்றியவனாயும் அவைகளைக் கேட்கச் சகியாத வனாயும் ஒன்பதுவித பக்தியையுடையவனாயும், குருநாதனுக்குத் தன்பாற் கிருபையுண்டாகும்படி ஆத்தம், அங்கம், தானம், சற்பாவம் என்னும் நான்கு பணிவிடைகளைச் செய்து கொண்டு, உடலின் நிழலைப்போலும் ஊசியின் நூலைப்போலும் சற்குருவைவிட்டு நீங்காமலிருப்பதெனவரியவும். திரவிய அர்ப்பணக் கிரமமாவது மனைவி, புத்திரன், பூமி, பசு, தாசி, தாசன், திரவியம், தானியம் இவைகளுக்குத் திரவியமெனப் பெயராம். குருவானவர் எல்லாவற்றையும் விட்டொழித்த சன்னியாசியாயின் அவர் இவைகளொன்றையும் விரும்பாதவராத லால் இவைகளனைத்தையும் அந்த குருமூர்த்தியின் கருத்துக் கிணங்கவிட்டு விடுதலாம். அல்லது குரு கிரகாச்சிரமியாயின் இவைகளனைத்தினையும் அவருக்கே உபயோகமாகும்படி தத்தம் செய்தலாம்.

**சரீர அர்ப்பணமாவது**

சரீரத்தைச் சதா குரு பணிவிடையிலும் அவர் கட்டளைக்குக் கொஞ்சமேனு மாறாதிருக்குதலுமாம்.

**மனதின் அர்ப்பணமாவது**

சச்சிதானந்த அகண்டவியாபக சைதன்யமே நம்மை ஆட் கொள்ளும் பொருட்டு கிருபையினால் குரு முகூர்த்தமாக



எழுந்தருளி வந்திருக்கின்றதென்னும் சந்தேக விபரீதமற்ற திட நம்பிக்கையால் ஆசாரியர் தன்பால் கிருபையோடிருக்கும்போது இரக்ஷககர்த்தாவாகிய மஹாவிஷ்ணுவின் சொரூபமாகவும், கோபமாயிருக்கும்போது சம்ஹார கர்த்தாவாகிய உருத்திரன் சொரூபமாகவும், இராஜச உலக விவகாரங்களிலிருக்கும்போது சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமாவின் சொரூபமாகவும், சாந்தமாயிருக்கும்போது சீதளமாகிய கங்காதேவியாகவும், உபதேச வசனங்களாகிற கிரஹணங்களால் சந்தேக விபரீதங்களுக்குக் காரணமாகிய அஞ்ஞானந்தகாரத்தை நிவிர்த்திக்கும்போது சூரிய சொரூபமாகவும் கருதி அற்பமேனஞ் சந்தேகிக்காமல் ஈஸ்வர பாவனை மாறாதிருக்கும்படி செய்தலாம்.

**வாக்கின் அர்ப்பணமாவது**

குரு வாக்கியமே சகல தாபங்களையுஞ் சாந்தஞ் செய்தலான குளிர்ச்சி பொருந்திய தேவாமிர்தமென்னும் திட நிச்சயத்தால் அற்பமேனுந்தோட திருஷ்டியுண்டாகாமல் கருமேந்திரிய மைந்திலொன்றாகிய வாக்கிந்திரியத்தைக் குருவின் நாமத்தையே பஜனம் செய்ய நியமித்தலாம்.

**குருபரிவாத நிந்தையாவது**

குருவின்பாலுள்ள கெட்ட குணங்களை எடுத்துரைப்பது பரிவாதமாம். இல்லாததுற் குணங்களை ஆரோபத்துக் கூறுதல் நிந்தையாம். எவ்விடத்திலிவைகளிருக்கின்றனவோ அவ்விடத்திலிராமல் தன்னிரு காதுகளையும் மூடிக் கொண்டு வேறிடத்திற்குச் சென்றுவிட வேண்டும். பரிவாதம் செய்தவனுக்குக் கழுதைச் சென்மமும், நிந்தை செய்தவனுக்கு நாய்ச் சென்மமும் பிரயோஜனமென்று வியாசர் சொல்லி யிருக்கிறார்.

## ஒன்பது வித பக்தியாவது

**1. சிரவணம்**

குரு நாமத்தை உச்சரிப்பது.

**2. கீர்த்தனம்**

அவர் நாமத்தை அடிக்கடி தோத்திரம் பண்ணுதல்.

**3. ஸ்மரணம்**

அன்னவரின் சொரூபத்தை மனத்தினாற்றி யானித்தல்.

**4. பாதசேவனம்**

அவர் பாதார விந்தங்களில் அடிக்கடி நமஸ்காரஞ் செய்தல்.

**5. அர்ச்சனம்**

அத்தகையரின் பாதங்களில் பத்திர புஷ்பங்களைக் கொண்டு அருச்சித்தல்.

**6. வந்தனம்**

அவருடைய சன்னிதானத்தில் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்தல்

**7. தாசபாவம்**

அன்னவரின் சொரூபத்தை நாமடைய வேண்டுமென்னு மிச்சையால் அவரைத் தாழ்ந்து தாசனாயிருத்தல்.



**8. தோழமை**

அவருடைய அதிஷ்டானமும் நம்முடைய அதிஷ்டானமும் ஒன்றேயென நிச்சயித்து ஐக்கிய பாவத்தோடிருத்தல்.

**9. ஆத்ம நிவேதனம்**

தன்னுடைய சொரூபமான கூடஸ்தனை பிரஹ்மத்திலர்ப் பித்தல். அல்லது நிவேதனஞ் செய்தல். அல்லது தேகாதிகளெல் லாவற்றையுஞ் சமர்ப்பித்தலாம்.

## நான்கு வித பணிவிடைகள்

**1. ஆத்தப் பணிவிடையாவது**

ஆசாரியர் மனோ நோக்கப் பிரகாரம் சிஷ்யன் அறிந்து நிற்பதான அனுகூல விருத்தியாம்.

**2. அங்கப் பணிவிடையாவது**

தன்னைப் பாதுகாக்கும் நிலைமைபோல் ஆசாரியர் அங்கத்தைப் பாதுகாத்தலும், அவர் சரீரத்துக்குத் தக்க குற்றேவல் புரிதலுமாம்.

**3. தானப் பணிவிடையாவது**

பிதா தன்னுடைய பொருளை தன்னைப் பாதுகாக்கத் தகுந்த மகனுக்குக் கொடுக்கிறதுபோலச் சீடன் தன்னைப் பந்தத்தினின்றும் வெளிப்படுத்தி முக்தியிற் சேர்க்கத்தக்க ஆசாரியருக்குத் தன் உடல், பொருள், ஆவி மூன்றையுந் தத்தஞ் செய்து, அவரிருக்குந் தானமாகிய மனை, நிலம் முதலிய வற்றை முதலில் தன்னுடைய மனை, நிலங்களைப் பாதுகாத்து வந்ததிலும் பதின்மடங்கதிகமாகப் பாதுகாத்து வருதலாம்.

## ஒன்பது வித பக்தியாவது

1. சிரவணம்

குரு நாமத்தை உச்சரிப்பது.

2. கீர்த்தனம்

அவர் நாமத்தை அடிக்கடி தோத்திரம் பண்ணுதல்.

3. ஸ்மரணம்

அன்னவரின் சொரூபத்தை மனத்தினாற்றி யானித்தல்.

4. பாதசேவனம்

அவர் பாதார விந்தங்களில் அடிக்கடி நமஸ்காரஞ் செய்தல்.

5. அர்ச்சனம்

அத்தகையரின் பாதங்களில் பத்திர புஷ்பங்களைக் கொண்டு அருச்சித்தல்.

6. வந்தனம்

அவருடைய சன்னிதானத்தில் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்தல்

7. தாசபாவம்

அன்னவரின் சொரூபத்தை நாமடைய வேண்டுமென்னு மிச்சையால் அவரைத் தாழ்ந்து தாசனாயிருத்தல்.



8. தோழமை

அவருடைய அதிஷ்டானமும் நம்முடைய அதிஷ்டானமும் ஒன்றேயென நிச்சயித்து ஐக்கிய பாவத்தோடிருத்தல்.

9. ஆத்ம நிவேதனம்

தன்னுடைய சொரூபமான கூடஸ்தனை பிரஹ்மத்திலர்ப் பித்தல். அல்லது நிவேதனஞ் செய்தல். அல்லது தேகாதிகளெல் லாவற்றையுஞ் சமர்ப்பித்தலாம்.

## நான்கு வித பணிவிடைகள்

1. ஆத்தப் பணிவிடையாவது

ஆசாரியர் மனோ நோக்கப் பிரகாரம் சிஷ்யன் அறிந்து நிற்பதான அனுகூல விருத்தியாம்.

2. அங்கப் பணிவிடையாவது

தன்னைப் பாதுகாக்கும் நிலைமைபோல் ஆசாரியர் அங்கத்தைப் பாதுகாத்தலும், அவர் சரீரத்துக்குத் தக்க குற்றேவல் புரிதலுமாம்.

3. தானப் பணிவிடையாவது

பிதா தன்னுடைய பொருளை தன்னைப் பாதுகாக்கத் தகுந்த மகனுக்குக் கொடுக்கிறதுபோலச் சீடன் தன்னைப் பந்தத்தினின்றும் வெளிப்படுத்தி முக்தியிற் சேர்க்கத்தக்க ஆசாரியருக்குத் தன் உடல், பொருள், ஆவி மூன்றையுந் தத்தஞ் செய்து, அவரிருக்குந் தானமாகிய மனை, நிலம் முதலிய வற்றை முதலில் தன்னுடைய மனை, நிலங்களைப் பாதுகாத்து வந்ததிலும் பதின்மடங்கதிகமாகப் பாதுகாத்து வருதலாம்.

**4. சற்பாவப் பணிவிடையாவது**

ஆசாரியரைச் சச்சிதானந்த பிரஹ்ம சொரூபமாகச் சந்தேக விபரீதங்களின்றி மனதிற் பாவித்தலாம்.

இதற்குப் பிரமாணம், வேதாந்தச் சூடாமணி :

*ஆத்தமுட னங்கமே தானஞ் சற்பாவமா*
*மவற்றுட் குருபரனுக்கனுகூல விருத்தி*
*யாத்தமுயர் குருபரன் குற்றேவலே யங்கமருட்*
*குரவர்க்குரிய மனைநில முதலாமவற்றைக்*
*காத்தலதுதான மாஞ்சற் குருவே மெய்யாக்கண்ட*
*சிவமென நம்புமது வேசற் பாவம்.*

மாணாக்கர்கள் ஆசாரியரிடம் தெரிய வேண்டியதைத் தெரிந்து கொண்ட பின்னும், குருவைவிட்டு நீங்காதிருந்து பணிவிடைகள் செய்து வரவேண்டியது. ஏனெனில், தெரிந்து கொண்ட பின்னர் குரு பணிவிடைகளைச் செய்யாமல் கை விடுவார்களாயின் செய்த நன்றி கொன்ற தோஷமுளதாய்ச் சிஷ்யர்களடையத்தக்க ஞானத்தைத் தடை செய்யும். ஆதலால் சரீரமுள்ள பரியந்தம் பணிவிடை செய்து வரவேண்டும். பின்னும் சிஷ்யர்கள் குரு சன்னிதானத்துக்குப் போகும்போது வாகனத்தின்மீதும், பாதரக்ஷை தரிசித்துக் கொண்டும், தடி பிடித்துக் கொண்டும், ஆடையாபரணங்களைத் தரித்துக் கொண்டும், வாசனை மிகுந்த தைலங்களை அணிந்து கொண்டும், புஷ்பம், வெற்றிலை, சந்தனம் முதலிய வஸ்துக்களை உபயோகித்துக் கொண்டும் போகலாகாது. குரு சந்நிதானத்தில் ஆசனம் போட்டுட்காருதலும், காலை நீட்டிச் சாய்ந்து கொள்ளுதலும் கூடாது. ஆசாரியரின் மனக்கருத்து சிஷ்யனுடைய அபிப்பிராயத்திற்கு வேறுபட்டிருந்தாலும் அதுவும் சாஸ்திர முறையென்றே அவர் அபிப்பிராயம்போல் செய்வது உத்தமமாம். இவ்வாறு சிஷ்ய லக்ஷணம் சொல்லப்பட்டது.

-: ஓம் தத் சத் :-



ஓம்

# ஹடயோகம்

## ஹடயோகம் என்பதென்ன?

ஹ - சூரியன்; ட - சந்திரன்; யோகம் - சேர்க்கை. அதாவது, சந்திர சூரியர்களின் சேர்க்கை. இந்த ஹடயோகமானது எட்டு அங்கங்களோடு கூடியது. அதாவது 1. இயமம் 2. நியமம் 3. ஆசனம் 4. பிராணாயாமம் 5. பிரத்தியாகாரம் 6. தாரணை 7. தியானம் 8. சமாதி என்பனவாம். இவற்றில்

**1. இயமமாவது**

அஹிம்சை அதாவது கொல்லாமை. சத்தியம், அஸ்தேயம் (திருடாமை), பிரமசரியம், க்ஷமை (பொறுமை), திருதி (தைரியம்), தயை, ஆர்ச்சவம் (நேர்மை), மிதாகாரம், சௌசம், ஆகப்பத்தாம். இவற்றுள்,

**1. அஹிம்சையாவது**

வேதத்தில் விதிக்கப்பட்ட வியாதிகளுக்குச் சொல்லிய பிரகாரமல்லாமல் மற்றெந்த விதத்தினாலும் உயிர்களை ஹிம்சியா திருத்தலாம். நானே, தேகம், மனம், இந்திரியங்கள். ஆத்மாவே இல்லையென்னும் ஆத்மஹத்தியை மனதில் நினையாதிருப்பதையும், ஆத்மா, நித்தியம், நிராகாரம், நிர்க்குணம் என்னும் புத்தியை விடாதிருத்தலையும் மஹான்கள் கொல்லாமையென்பர்.

**2. சத்தியமாவது**

கண் முதலிய இந்திரியங்களால் கண்டவை, கேட்டவை, செய்தவை, அனுபவித்தவைகளை உள்ளபடி சொல்லி விடுதலாம்.

பிரஹ்மம், சத்தியம் மற்றவைகளெல்லாம் அசத்தியம் என்னும் நிச்சய புத்தியையும் சத்தியமென்பர்.

**3. அஸ்தேயமாவது**

அந்நியர்களின் இரத்தினம், சுவர்ணம், ஸ்திரீ முதலிய எந்த வஸ்துக்களையும் அபகரிக்க எண்ணாதிருத்தலாம். அல்லது ஆத்மாவினிடத்தில் அநாத்மத் தன்மையை விவகரியா திருத்தலையும் அஸ்தேயமென்பர்.

**4. பிரமசரியமாவது**

ஸ்த்ரீகளுடைய இச்சையைச் சொப்பனத்திற்கூட நினையாதிருத்தலாம். அல்லது கிரஹஸ்தர்கள் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ள ஏகாதசி, அமாவாசை, திரயோதசி, பௌர்ணமி, அஷ்டமி, ஜன்ம நக்ஷத்திர நாள், எண்ணையிட்டுக் கொள்ளுநாள், க்ஷவரஞ் செய்து கொள்ளும் நாள் முதலிய தினங்களை நீக்கி மற்றைய நாட்களில் தன் மனைவியை புணர்தலும் அன்னிய மாதர்களை மனம், வாக்கு, சரீரம் மூன்று கரணங்களினாலும் விலக்கியிருத்தலாம். ஸ்திரீகள் மாதவிடாயான நாள் முதல் நான்கு நாள் விலக்கி ஒற்றைப்பட்ட நாள்களில் புணர்ந்தால் பெண்ணும், இரட்டிப்பு நாள்களில் புணர்ந்தால் ஆணும் ஜனிக்கும். பிரஹ்ம பாவனையால் மனம் சஞ்சரித்தலை பிரமசரியமென்பர்.

**5. க்ஷமையாவது**

விரோதிகளால் தனக்கு எவ்வித துன்பம் வந்தாலும் மனங் கலங்காதிருத்தலும், சரீர முடியுங்காலஞ் சமீபித்தாலும் மனங் கலங்காதிருத்தலையும் க்ஷமையென்பர்.



**6. திருதியாவது**

வேதாந்த வாக்கிய விசாரமே சம்சார நிவிர்த்திக்கு ஏதுவென்னுந் திடமாம். நான் ஆத்மா அன்னியனல்லன் என்னுந் திட நிச்சயத்தையும் திருதியென்பர்.

**7. தயையாவது**

சகல உயிர்களையும் தன்னுயிர்போலக் காணுதலாம்.

**8. ஆர்ச்சவமாவது**

புத்திரன், மித்திரன், களத்திரம் முதலியவர்களிடத்தும், விரோதிகளிடத்தும், தன்னிடத்தும், சதாகாலமும் சமத்துவ பார்வையுடனிருத்தலாம்.

**9. மிதாகாரமாவது**

உலகத்தில் அனுகூலமான ஆகாரம் தேவாமிர்தமாக இருந்தாலும் பிராண வாயு சஞ்சரிக்கிறதற்குக் கால் வயிறு காலியாயிருக்கும்படி அரை வயிறு ஆகாரமும் கால் வயிறு ஜலமும் உட்கொள்ளுதலாம். அல்லது பஞ்சேந்திரிய விடய சுகங்களை அற்பமாக உபயோகித்தலாம்.

**10. சௌசமாவது**

பாகியம், ஆந்தரம் என்று சௌசம் இரு வகையாம். அவற்றுள் தன்னுடம்பில் மண் முதலியவைகளைக் கொண்டு நீரினால் கழுவுதல் பாகிய சௌசம். நான் சுத்தன்; நான் அமலன் என்னும் ஞானம் ஆந்தர சௌசம். இந்த இரண்டு வகை சௌசமுடையோன் பரிசுத்தனாம். ஆந்தர சௌசமில்லாமல் பாகிய சௌசமாத்திரமுடையவனை அஞ்ஞானம் விட்டு நீங்காது.

பாகிய சௌசமில்லாமல் ஆந்தர சௌசமுடையவனை அஞ்ஞானமே விட்டு விலகும்.

**நியமமாவது**

1. தவம் 2. சந்தோஷம் 3. ஆஸ்திக்கியம் 4. தானம் 5. ஈஸ்வர பூஜை 6. சித்தாந்த ஸ்மரணம் 7. லஜ்ஜை 8. மதி 9. ஜபம் 10. விரதம் எனப் பத்தாம்.

இவற்றுள்,

**1. தவமாவது**

வேதத்தின் கருமகாண்டத்திற் கூறிய விதிப்படி கிரிச்சிரசாந்தராயண முதலியவற்றால் சரீரத்தை உலர்த்துவதாம். அல்லது பந்தம் என்பது யாது? முக்தியென்பது யாது? பந்தமெப்படி வந்தது? அது எச்சாதனத்தால் நிவிரித்தியாம்? ஜன்ம நாசமாகும்படியான ஜீவன் முக்தனாவது எப்போது? என்றிவ்வாறு சுத்தமான அந்தக்கரணத்தோடு கூடி விசாரிப்பதைத் தவமென்பர்.

**2. சந்தோஷமாவது**

கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைதலாம். அல்லது பிரமலோக பரியந்தம் உண்டாகின்ற ஆசைகளை ஒழித்து ஆத்மஞான ஆசையோடிருத்தலாம்.

**3. ஆஸ்திக்கியமாவது**

சுருதி, ஸ்மிருதி, புராணம், இதிகாசம் முதலிய சாஸ்திரங் களில் சொல்லிய விஷயங்களில் விசுவாசம் வைத்தலாம். அல்லது சற்குருவினால் உபதேசிக்கப்படும் மஹா வாக்கியத்தில் விஸ்வாசம் வைத்தலும் ஆஸ்திக்கியமென்பர்.



**4. தானமாவது**

நியாயமாகத் தான் சம்பாதித்த பொருளைச் சாதுக்களுக்கு அன்போடளித்தலாம். அல்லது உடல், பொருள், ஆவி மூன்றையும் சற்குருவுக்குத் தத்தஞ் செய்தலையும் தானமென்பர்.

**5. ஈஸ்வர பூஜையாவது**

பிரமா, விஷ்ணு, உருத்திர, மஹேஸ்வர, சதாசிவ முதலிய ஈஸ்வராதிகளைத் சக்தியனுசாரமாகப் பூசித்தலாம். அல்லது இராகத் துவேஷாதி குணங்களொழிந்து உண்மையான வசனம், நல்லொழுக்கம், அஹிம்சை, புலால் மறுத்தல் இவைகளோடு புண்ணிய கருமங்களைச் செய்தலும் ஈஸ்வர பூஜையெனப்படும்.

**6. சித்தாந்த ஸ்மரணமாவது**

பிரமா, விஷ்ணு, உருத்திரர்களா லறிதற்கறியவன், சச்சிதானந்த சொரூபன், நித்தியன், முக்தன், ஒப்பிலாதவன், வியாபகன், சின்மாத்திரன், அவ்வியாகிருதன், அனாதிமுக்தன், நிர்க்குணன், நிருவிகற்பன், அகர்த்தன், அபோக்தன், ஆனந்தன், சத்தியன், ஞான சொரூபன், சொப்பிரகாசன், சுயம்பிரகாசன், அசங்கன், அப்பிரமேயன், பிரத்தியக்ஷன், புத்தன், பரமானந்தன், அசலன், பிரத்தியகான்மன், அந்தராத்மன், சம்பு, அமிர்தன், நிராகாரன், அச்சுதன், மனோவாசாமகோசரன், அபரோக்ஷிதன், அரூபன், சிவம், சாந்தன், அபயன், நித்தியானந்தன், சூனியன், புராதனன், புராணன், மஹா சூனியன், நிவிர்த்தன், உன்னதன்விபு, அகாரணன், பரிபூரணன், அனந்தன், அகண்டன், சர்வகாரணன், சர்வாத்மன், அநேகரூபன், ஏகரூபன், பரமார்த்தன், நானாரூபன், நிஷ்பிரபஞ்சன், அபேதன், நிர்விசேஷன், அத்வைதன், சர்வாபாவன், சர்வதோமுகன், அபரிச்சின்னன், அநாவிருதன்,

பரப்பிரமன், பிரஹ்மம் என்றுணர்த்தும் வேதாந்த சித்தாந்தத்தை அறிவதாம்.

7. லஜ்ஜையாவது

வைதீக, லௌகீக, கருமங்களுக்கு விரோதமாகிய சுருமங்களிற் பிரவிர்த்தித்தற்கு நாணுவதாம். அல்லது மனம், பிரஹ்மாகாரமாகச் செல்லுதலை விட்டு விடயாகாரமாகச் செல்ல நாணுவதாம்.

8. மதியாவது

வைதீக கருமங்களெல்லாவற்றிலு முண்டாகின்ற சிரத்தையாம் அல்லது சமாதி காலத்தில் யூகித்துப் பிரதிபந்தங்களையகற்றித் தன்னையடைதலும் மதியாம்.

9. ஜபமாவது

ஆசாரியருபதேசித்த மந்திரத்தை வேதவிதிப்படி அப்பியாசித்தலாம். அல்லது கல்ப, சூத்திர, வேத தர்ம சாஸ்திர, புராண, இதிகாச முதலிய கிரந்தங்களை அப்பியாசஞ் செய்தலும் ஜபமென்பர். இந்த ஜபமும் வாசிகம், மானதம் என இரு வகையாம். இவற்றுள் வாசிகமும் உபாம்சு, உச்சம் என இரு வகையாம். அன்னியர்கள் காதுக்குக் கேட்காமல் மந்திர ஜபஞ் செய்தல் உபாம்சுவாம். மந்திரத்தை உறத்து ஜபித்தல் உச்சமாம். மானதமும் மனனம், தியானமென இரு வகையாம். உச்சத்தைக் காட்டிலும் உபாம்சு நூறு மடங்கதிக பலனாம், உபாம்சுவைக் காட்டிலும் மனன தியானங்கள் கோடி மடங்கதிகப் பலனைக் கொடுப்பனவாம். உச்சத்தாற் பலனுண்டாவதாகவிருப்பினும் அது நீசர்களுடைய காதிற்படுமாகையால் நிஷ்பலமாம். இந்த ஜபங்களும் வேத விரோதமாகிய சாஸ்திரங்களை யனுசரித்துச் செய்யப்படுமாயினும் பயனற்றதேயாம்.



10. விரதமாவது

வேதத்திற் கூறிய விகித கர்மங்களை யனுஷ்டித்தலாகிய நித்திய நைமித்திய கருமங்களாம். இதனை யாகமென்றுங் கூறுவர். அல்லது ஆசாரியர்கள் கூறும் உபவாசங்களை அப்பியாசித்து வருதலும் விபூதி உருத்திராக்ஷங்களணிதலும், சிவ பூஜை, விஷ்ணு பூஜை செய்து வருதலும் துளசி மணி தாமரை மணி பூண்டு கொள்ளுதலும் விரதமென்று சொல்லப் படும். இவ்விதமாக இயமம் பத்து, நியமம் பத்தென வராக உபநிஷத்து ஐந்தாவது அத்தியாயத்திலும் தரிசனோபநிஷத்திலும் சூதசம்ஹிதை ஞான காண்டத்திலும், ஹடயோகப் பிரதீபிகையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஜீவன் முக்திப் பிரகரணம், விசார சாகரம் முதலிய கிரந்தங்களில் இயமம் பத்தையும் நியமம் பத்தையும் ஐந்தைந்தாகவும் சுருக்கிச் சொல்லியிருக்கிறது. இவைகளில் இயம, நியமங்கள் பத்துப்பத்து விதமெனல் புராண ரீதியாம். ஐந்து விதங்களெனல் வேதாந்த ரீதியாம்.

ஆசனமாவது

ஸ்வஸ்திகம், கோமுகம், வீரம், கூர்மம், பதுமம், குக்குடம், உத்தானம், மத்ஸியம், பச்சிமதானம், மயூரம், சிம்மம், பத்திரம், சித்த முதலிய ஆசனங்கள் இன்னும் பலவுளதாம். இவற்றின் விரிவை அரிய வேண்டுமாயின் ஹடயோகப் பிரதீபிகையிற் காண்க.

பிராணாயாமமாவது

ஜனங்களில்லாத பிரதேசத்தில் ஆகார நியமம், ஆசன நியமம் இவைகளோடிருந்து, நாசி நுனியில் நாட்டம் வைத்துக் கொண்டு, பிராண வாயுவை இடை கலை (சந்திர கலை) நாடியால் வெளி விடுவதாகிய ரேசகமும், பிங்கலை (சூரிய

கலை) நாடியால் தன் சக்தி மட்டுக்கும் உள்ளே இழுப்பதாகிய பூரகமும் சுழுமுனையில் சலிக்க விடாமல் தம்பிக்குதலாகிய கும்பகமும் சேர்ந்து பிராணாயாமமென்பர்.

இந்தப் பிராணாயாமமும் பிரணவ மந்திர உச்சாரணத்தோடு செய்வது சகற்பமென்றும், பிரணவ மந்திர உச்சாரணமின்றிச் செய்வது அகர்ப்பமென்றும் இரு வகையாம். இந்தப் பிராணாயாமத்தைச் சிலர் ஆப்பியந்தரம், பாஹியம், ஸ்தம்ப விருத்தி என்று மூன்று விதமென்பர். அதாவது, பிராணன் உள்ளுக்கிழுக்கப்பட்டு அதன் கதி நின்றுபோவது ஆப்பியந்தாம், வெளியில் விடப்பட்டு அதன்கதி நின்றுபோதல் பாஹியம், உள்ளிலும் வெளியிலும் ஒரே காலத்தில் அதன் கதி நின்று போகுதல் ஸ்தம்ப விருத்தியென வரியவும்.

## பிராணாயாமம் அனுஷ்டிக்கும் கிரமமாவது யாது?

மது, மாமிசங்களையும் ஏனைய லாகிரி பதார்த்தங்களையும் விலக்கிக் கத்திரிக்காய், பாவக்காய், அவரைக்காய், மொச்சைக்காய், வாழைக்காய், வெண்டைக்காய், முருங்கைக்காய், கருணைக் கிழங்கு, சேமைக்கிழங்கு முதலிய சாத்மீக பதார்த்தங்களையும், சிறு கீரை, அரைக்கீரை, புளிச்சக்கீரை, பொன்னாங்கண்ணி, தூதுவளை முதலிய கீரை தினுசுகளையும் உபயோகித்துக் கொண்டு, மித ஆகாரம், மித நித்திரையுடனிருந்து அப்பியாசிக்க வேண்டும். பிராணாயாமம், ரேசகம், பூரகம், கும்பகம் என மூன்றில் வெளியுள்ள வாயுவை நாசின் வழி உள்ளுக்கிழுத்தல் **பூரகம்**. வெளியிலிருந்து உள்ளிக்கிழுத்த வாயுவை வெளியில் விடாமல் உள்ளே நிறுத்துதல் **கும்பகம்**. உள்ளுக்கிழுத்து நிறுத்திய வாயுவை வெளியில் விடுதல் **ரேசகம்**. இவ்விதம் பிராணாயாமம் செய்யும்போது இரண்டு கண்களையும் மூடி ஓங்கார உச்சரிப்புடனாவது பிராணாயாம மந்திரத்துடனாவது



பிராணனோடு மனதையுஞ் சேர்த்து இருபத்தைந்து பிரணவ உச்சாரணம் செய்யும்வரை கும்பகம் செய்ய வேண்டும். பின் நாளுக்குநாள் அதிகமாக அப்பியாசித்து ஐந்நூறு பிரணவ உச்சாரணஞ் செய்யும்வரை அப்பியாசித்து விட்டால் இருதய கமலத்தில் ஓர்வித நோயை உண்டாக்கும். அதை அப்படியே விட்டு விடாமல் ஆயிரம் பிரணவம் உச்சரிக்கும்வரை உயர்த்திக் கொண்டு போவதனால் அந்த நோய் தானே நிவிர்த்தியாகிறது. பிராணயாமஞ் செய்த முப்பது நிமிஷத்திற்குப்பின் ஆகாரம் உட்கொள்ள வேண்டும்.

### சுவாசத்தை நாடிகளில் மாற்றும் விதங்கள்

சந்திர நாடியிலிருக்கும் சுவாசத்தை சூரிய நாடியில் மாற்ற வேண்டுமானால் இடது காலின்பேரில் வலதுகாலைச் சமமாய் வைத்துக் கொண்டு, இடது கையைப் பூமியிலுன்றி வலதுகாற் பெருவிரலின் பெரு நரம்பைக் கணுக்காலிடம் வலது கை நடுவிரலால் அசைத்துக் கொண்டேயிருந்தால் சூரிய நாடியில் மாறிவிடும்.

சூரிய நாடியிலிருக்கும் சுவாசத்தை சந்திர நாடியில் மாற்ற வேண்டுமானால் மேற்சொல்லியதுபோல வலது காலின் பேரில் இடது காலை வைத்துக் கொண்டு வலது காலைப் பூமியிலூன்றி இடதுகைப் பெருவிரலால் இடதுகாற் பெருவிரலின் நரம்பை மேற்படி கணுக்காலிடம் அசைத்துக் கொண்டேயிருந்தால் சந்திர நாடியில் மாறும். இன்னும் இதனுண்மையை அறிய விரும்பில் பதஞ்சலி யோக சூத்திரத்திற் காண்க.

### பிரத்தியாகாரமாவது

சப்தாதி விஷயங்களினின்றும் சுரோத்திராதி இந்திரியங் களோடு மனத்தை அந்தர்முகமாகத் திருப்பிக் கொள்ளுதலாம்.

**தாரணையாவது**

அந்தர்முகமாகத் திருப்பப்பட்ட மனதைப் பிரத்தியேகாத்ம சொரூபத்தில் நிறுத்துதலாம்.

**தியானமாவது**

இலக்ஷிய வஸ்துவின்பால் அதாவது பிரஹ்ம வஸ்துவினிடத்துச் செல்லும் சஜாதீய விருத்திப் பிரவாகமெனவறிக.

**சமாதியாவது**

வெளிப்படும் சமஸ்காரங்களின் திரஸ்காரங்களும் அடங்கும். சம்ஸ்காரங்களின் பிரகடமுமுடைய அந்தக்கரண விருத்தியின் ஏகாக்கிர பரிணாமமாம். இஃதல்லாமல் தியானி, தியானம் இரண்டையும் விட்டுத் தியான வஸ்துவை மாத்திரம் விஷயஞ் செய்வதும் சமாதியாம். அல்லது நானே பிரஹ்மம், பிரஹ்மமே நானென்றுள்ள சர்வவிருத்திகளின் நிரோதமாகிய நிலைமையும் சமாதியாம். சமுத்திர ஜலத்தில் உப்புக் கலந்தெப்படி ஐக்கியத்தையடைகிறதோ, அப்படி ஆத்மாவிற்கும் மனத்திற்கும் ஐக்கியமும் சமாதியாம். பிராணன் தேய்ந்து மனதொடுங்கும் போதுண்டாகும் ஐக்கியமும் சமாதியாம். ஜீவாத்ம பரமாத்ம சமத்தன்மையுண்டாகிச் சகல சங்கற்பங்களும் நஷ்டமாதல் சமாதியாம். கருவி கரணங்களோய்ந்து தன்னிலையில் ஒத்து நிற்றலுஞ் சமாதியாம். சப்த இந்திரியம் அடியோடு நசித்தவிடமும் சமாதியாம். ஞானபுத்திரா! இவ்விதமான அஷ்டாங்க யோகங்களால் அஷ்டமா சித்திகளுண்டாம். அதாவது அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பனவாம்.



இவற்றில்

1. அணிமாவாவது - அணுப் போலாதல்.
2. மகிமாவாவது - மிகவும் பருத்தல்.
3. கரிமாவாவது - இரும்பு மலையினுங் கனத்தல்.
4. இலகிமாவாவது - கனமில்லாமல் இலேசாகுதல்.
5. பிராத்தியாவது - வேண்டுவனவடைதல்.
6. பிராகாமியமாவது - நினைத்த போகமெல்லாம் பெறுதல்.
7. ஈசத்துவமாவது - யாவருக்குத் தேவனாதல்.
8. வசித்துவமாவது - யாவரும் வணங்கி நிற்றல்.

இவ்விதமான மிகுந்த பல சித்திகளாம். இச்சித்திகளிலிச்சையுடையோர்க்கு முத்தி கிட்டாது. இதற்குப் பிரமாணம்,

**வாசிட்டத்தில்**

*ஆதரஞ் செய்சித்திகளி னமிழ்வோர்க்கப்*
*பேரடையாதென்றும்*

**கைவல்ய நவநீதத்தில்**

*முனிவர் சித்திகள் விநோதமாத்திரந் தருமுத்தியைத்*
*தாராவே.*

என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் சித்திகளினிச்சையை அத்தியந்தம் அகற்றி முக்தினிமித்தமாக இடைவிடா முயற்சி செய்ய வேண்டும்.

தாயுமானவரும்

*சித்திநெறி கேட்டல் செகமயக்கஞ் சென்மமற்ற*
*முத்திநெறி கேட்டல் முறைகாண் பராபரமே.*

என்றறைந்துள்ளாராதலால் முத்தி மார்க்கத்தை விசாரித்தலே மாந்தர்களாலடையத் தகுந்த மதியாம். இவ்வாறு ஹடயோகத்தின் தன்மையைச் சுருக்கமாகச் சொல்லப்பட்டது.

-: ஓம் தத் சத் :-



ஓம்

# மனம்

**மனமானது**

ஆன்மாவிடத்துண்டாகியதும், சூனிய ஸ்வரூபத்தோடுங் கூடிய ஓர் அனித்திய ஜடகற்பித வஸ்துவாம். இதற்குப் பிரமாணம்,

வாசிட்டத்தில்

*சடசூனியமா யெங்கணுஞ்சேர் தனிநெஞ்சுக்குப்*
*பேரொழிய*
*உடனாங்க கனந்தனைப்போல உள்ளும்புறம்*
*பழுருவிலதாம்*

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இம்மனதையடக்காது அதாவது, அதன் சொருபத்தை உள்ளவாறறியாமல் ஒருவனும் ஜன்மத்தை நிவிர்த்திக்க முடியாது. இதற்கு பிரமாணம்,

வாசிட்டத்தில்

*சித்தசய மாத்திரமாந் தெய்வமருந் தாலன்றிச்செனம*
*வெந்நோய்*
*சத்தியமே பிறமுயற்சியா வையினுந் தீராது தகைமை*
*மிக்கோய்.*

என்றறையப்பட்டிருக்கிறது.

ஆதலின், மனதை அவசியம் நிரோதித்தல் வேண்டும். அம் மனம் எவ்வித உபாயத்தால் நாசமாகுமெனிலோ பிரஹ்மாகார

மாகச் செலுத்துகிற மார்க்கமொன்றாலேதானாசமாம். ஏனெனின் மனது உற்பத்தியான இடம் ஆத்மாவாகையால் ஆத்மாவிடத்திலேதானது நாசமாம். பின் இந்த ஆன்மாவிடத் துண்டாகிய மனத்தினாலேயே பிரபஞ்சமுண்டாகிறது. அழிவு முண்டாகிறது. இன்ப, துன்பங்களுமுண்டாகிறது. பந்தமுக்தி யுண்டாகிறது. இம்மனத்தாலேயே எல்லாமுண்டாகிறது. இம்மனோ முயற்சியைக் கொண்டு நாமே இந்திரராகலாம். சந்திரனாகலாம். பிரமாவாகலாம். சிவனாகலாம். விஷ்ணுவாகலாம். மற்றெல்லாத் தேவர்களுமாகலாம். சச்சிதானந்த பிரஹ்மமே யாகலாம். ஆதலால் மனோ வல்லபத்தை அறிதல் மிக்க அரிதான காரியமாம். ஒருவன் மனதை அடக்க முயலுவானாயின் முதலில் இந்திரியங்களை அடக்கிக் கொண்டு பிற்பாடுதான் மனதை அடக்க முயல வேண்டும். ஏனெனில் உள் மனதை யடக்குவதற்கு வெளி மனதாயுள்ள ஞானேந்திரிய கருமேந்திரி யங்களை அதனதன் வழிவிடாது நிறுத்திக் கொண்ட பிற்பாடு உள் மனத்தையடக்க முயல வேண்டும். இந்த அப்பியாசி மிகுந்த ஊக்கத்துடனும் திட தைரியத்துடனுமிருத்தல் வேண்டும். மனோ வல்லமையைக் காட்டிலுமதிக வல்லமை எவனிடத்துண்டாமோ அவன்தானிம் மனதையடக்கலாம். மனதை அடக்குவதுமிக்க அரிதென இராமச்சந்திரரும் அருச்சுனனும் முறையே ஞானவாசிஷ்ட பகவற்கீதா சாஸ்திரங் களிற் கூறியிருக்கின்றனர். அற்பவறிவுள்ள நாம் எப்படி மனதை யடக்குவதென்னும் அபாவமுண்டாதல் கூடாது. நம்முடைய லக்ஷணத்தை நாமே மறந்து நம்மை ஓர் சிறிய மனிதனாக நினைத்துக் கெட்டு ஜனன, மரணப் படுகுழியிலாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆதலால் நம்முடைய யதார்த்த லக்ஷண மின்னதென்பதை அவசியம் சந்தேக விபரீத மறத்தெரிந்து கொள்ள வேண்டும். தெரிந்து கொண்டபின் மனதின் லக்ஷணம் தானே தெரியும். ஒவ்வொருவர்களும் அவாளவாளுடைய



லக்ஷணங்களை அறிய இச்சைக் கொண்டு அறிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியது உசிதமாம். நாம் நம்மை இன்னாரென்று விசாரிப்போமாயின் நாம் நம்மைச் சரீரமென்று சொல்வோம். இச்சரீரமே நாமாயின் இச்சரீரம் அநித்திய அசுத்த ஜடரூபமாக இருப்பதாலும் நாமெப்போது மழிவல்லாத ஆத்மாவென்று சாஸ்திரங்கள் கூறுகின்றமையாலும் தூலசரீரம் நாமல்ல. மனம் நாமோ வென்னில், மனோநாசஞ் செய்தாலாத்ம தரிசனமுண்டென்று சுருதிகள் கூறுகிறபடியால் மனதும் நாமல்ல. பின்னோ, பிரத்தியகான்மாவே நாமென்று மனோ நாசவுபாயத்தோடு ஆத்மாவை அபரோக்ஷமாக அறிவதே மனோ லக்ஷணத்தையறிவுமுபாயமாம். மற்றோ, மனதையடக்கி ஆள்வது அசாத்தியமான காரியமென்று விட்டுவிடுதல் கூடாது. அசாத்தியமென்று நினைப்பதும் ஒரே மனந்தான். எப்படி நினைப்பிருக்கிறதோ அப்படியே முடியுமாதலால் மனதை அடக்கியாள்வது இலேசான காரியமென்று நினைக்க வேண்டும்.

**மனதையடக்க முயற்சிக்கும் அப்பியாசிகள் நினைக்க வேண்டிய விபரங்கள்:**

மனம் எப்போதுமின்றிய சூனிய வஸ்துவென்றும் அதை அடக்கியாளுவது இலேசான காரியமென்றும், மனம் நம்மைத் தவிர அன்னியமானதல்லவென்றும், மனதிற்கு உருவம் சங்கற்ப மென்றும், சங்கற்பத்திற்கு உருவம் ஆத்மாவென்றும் ஆத்மா வினுடைய உருவமே நம்முடைய உருவமென்றும், நம்முடைய உருவமே சர்வ அண்ட சராசரங்களென்றும், சர்வ அண்டசராசரங் களும் என் சொரூபத்தினலைகளென்றும் அறிய வேண்டும். மனதின் வல்லமையை இவ்வளவவ்வளவென்று கூற முடியாது. ஆனால் ஆத்மாவை யறிந்தவிடத்தில் மாத்திரம் நாசமாம். அந்த மனோவல்லமையைக் கொண்டே பிரம, விஷ்ணு, ருத்திரர்களும் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார முதலிய முத்தொழில்களையுஞ்

செய்கின்றனர். பின்னும் நம்முடைய முற்கால மஹரிஷிகளும் இக்கால முனிகளும், தற்கால ஞானிகளும் மிக்க அற்புதமான பற்பல சித்திகளையும் வேதாந்த உபந்நியாஸ சாமர்த்தியங் களையும் பிரஹ்ம நிஷ்டையையும் அடைந்திருக்கிறார்கள்.

முக்தியடைய வேண்டியவர்கள் மனதைச் சித்தி மார்க்கத்தில் செலுத்தல் கூடாது. ஏனெனில் சித்தியானது முக்தியை அடைவிக்க வொட்டாது. இடையிற்றடுத்துக் கொள்ளுகிற ஓர் பிரதிபந்தமாகவிருப்பதாலும் சித்தி வீண் விளையாட்டு மாத்திரமா யிருப்பதாலும், மாயா கற்பனையின் மயக்கமானதாலும் சித்தியை யடைய வேண்டுமென்னு மிச்சையை விட்டுவிட வேண்டும். மனதாற் செய்யத் தகாத செய்கையில்லை. எல்லாவற்றையும் செய்யலாம். இம்மனோவல்லபத்தையறியாது, தன்னை மிகவும் கீழான தன்மையனாய் நினைத்து, ஜனன, மரணப் படுகுழியில் வீழாமல், மனோவல்லபத்தையறியு நிமித்தம் அம்மனதின் ஆதார மான ஆத்மாவையரிய அவாக் கொண்டு ஆத்மாவையறிந்து அதனிடத்துண்டான மனதின் சொரூபத்தைத் தரிசித்து அபரோக்ஷ சாக்ஷாத்கார நிலையை அடைதலே மிக்க மேலான தன்மையும் வேதாந்த சம்பிரதாயமுமாம்.

-: ஓம் தத் சத் :-



ஓம்

# பிரமசரியம்

## பிரமசரியமாவதென்ன?

எட்டுவித மைதுனங்களில் ஒன்றேனுமில்லாமல் ஸ்வப்பனத் திலும் ஸ்திரீகள் ஞாபகமின்றியிருப்பதுடன் இந்திரிய நிக்கிரமா யிருப்பது பிரமசரியமாம். இதற்குப் பிரமாணம்:-

ஈஸ்வர கீதையில்

*கறையுறு மரிவையர் திறங்களாவிலும்*
*பிறழ் வறமறப்பது பிரமசாரமாம்.*

என்று கூறியிருக்கிறது

எட்டுவித மைதுனங்களாவன

1. தரிசனம் 2. பரிசனம் 3. கேளி 4. கீர்த்தனம் 5. சங்கற்பம் 6. குய்யா பாஷாணம் 7. அத்தியவசாயம் 8. கிரியா நிவிர்த்தி. ஆக எட்டாம். இவற்றுள்,

**1. தரிசனமாவது**

காமவிச்சையால் ஸ்திரீகளைப் பார்ப்பது.

**2. பரிசனமாவது**

அந்த ஸ்திரீகள் சரீரத்தைத் தீண்டுவது.

**3. கேளியாவது**

அந்த ஸ்திரீகளோடு விளையாடுதல்.

4. கீர்த்தனமாவது

அந்த ஸ்திரீகளைப் புகழ்வது.

5. சங்கற்பமாவது

அந்த ஸ்திரீகளை அடிக்கடி நினைப்பது.

6. குய்யா பாஷாணமாவது

அந்த ஸ்திரீகளோடு இரகசியமாய் பேசுதல்.

7. அத்தியவசாயமாவது

அந்த ஸ்திரிகளை ஆலிங்கனம் பண்ணுதல்.

8. கிரியா நிவிர்த்தியாவது

அந்த ஸ்திரீகளைப் புணர்ந்து, இந்திரிய விசர்ச்சனஞ் செய்தல்.

இந்தவிதமான எட்டுவித மைதுனங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்வெட்டுவித மைதுனங்களும் ஒன்றிற்கொன்று தாரதம்மியமின்றி ஒரேவித பாபங்களோடு கூடியதென ஸ்மிருதிகள் முறையிடுகின்றன. இந்த எட்டுவித மைதுனங்களில்லாதவனெவனோ அவனே பிரமசாரியாம்.

-: ஓம் தத் சத் :-



ஓம்

# பெண்கள்

## பெண்களுக்கு ஞானமுண்டா?

உண்டு. அதாவது, முன் காலத்திலுள்ள சூடாலை, லீலை, கற்கடி, மைத்திரி முதலிய இன்னும் அநேக ஸ்திரீகள் ஆத்ம ஞானிகளாயிருந்திருக்கிறதாக ஞான வாசிட்டம் முதலிய கிரந்தங்கள் கூறுகின்றமையால் ஸ்திரீகளுக்கு ஆத்ம ஞானமுண்டென்று தீர்மானமாச்சுது. இதற்குப் பிரமாணம்:-

ஸ்ரீ பகவற்கீதையில்

*வணிகரு மற்றை வேளாண்மாந்தரு மகளிர்தாமும்*
*பணிவொடு மென்னைப் பேணிப் பற்றறுத்திடுவர்.*

என்று சொல்லியிருப்பதாலும், பின்னும் ஸ்திரீகளுக்கு மானசச் (சந்நியாசத்தோடு) பாகிய சந்நியாசத்திலு மதிகாரமுண்டு.

மானச சந்நியாசமாவது

விவகாரம் பண்ணிக் கொண்டிருந்தாலும் மனது மாத்திரம் பிரஹ்மத்தின் சுபாவமாக விருப்பதாம். இந்தச் சந்நியாசத்திலும் ஸ்திரீகளுக்கு அதிகாரமுண்டு. அதில் விவாகம் பண்ணிக் கொண்டு புருஷனிடத்திலிரா நின்ற ஸ்திரீகளுக்கு மானச சந்நியாசமும், விவாகமின்றிய கன்னிகைகளுக்கும் நாயகனில்லாத விதவைகளுக்கும் மந்திரோச்சாரண சகித தண்டு கமண்டலதாரண விவிதிஷா சந்நியாசத்திலதிகாரமுண்டு. பின், மோக்ஷ தருமமென்னுங் கிரந்தத்தில் ஜனகருடைய சம்வாதத்தில் திரிதண்டதாரண ஆச்ரமிகளாய் புத்திர தாரதன ஏடணாத்திரய தியாகிகளாய் பிக்ஷான்ன போஜனம் வேதாந்த சிரவணம்

ஏகாந்தத்திலிருந்து பிரஹ்மத் தியானஞ் செய்குதலாகிய சந்நியாசம் ஸ்திரீகளுக்குண்டென்று சொல்லியிருக்கிறது. இப்படியே சாரீர பாஷ்யத்திலும் வித்தியாரண்ய ஸ்வாமிகளாற் கூறப்பட்ட ஜீவன் முக்திப் பிரகரணமென்னுங் கிரந்தத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. இஃதன்றி போதாயனர் ஸ்திரீகளுக்குச் சந்நியாசங் கூறியிருக்கிறாரெனவும் அதை விஞ்ஞானேஸ்வரர் ஒப்பியிருக்கிறாரெனவும் வைத்திநாத தீக்ஷதீயம் வருணாச்சிரம காண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மனுதர்ம சாஸ்திரம் எட்டாவது அத்தியாயத்தில் சந்நியாசம் பண்ணிக் கொண்ட ஸ்திரீகளுண்டெனச் சொல்லியிருக்கிறது. ஆதலால், மானத சந்நியாசமே சகலமான ஸ்திரீகளுக்குமுண்டெனவும், கன்னிகை விதந்துகளுக்கு ஆச்சிரம ரூபமான சந்நியாசமுண்டெனவறியவும். பின்னும் ஆயர்பாடியிலுள்ள கோபிகாஸ்திரீகளும் ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம் பக்தி செய்து ஆத்மஞானம் அடைந்ததாக பாகவதத்திற் சொல்லியிருக்கிறது. ஆதலால், பெண்களுக்குச் சந்நியாசத்திலதிகாரமும் ஞானாதிகாரமும் உண்டெனவறியவும்.

-: ஓம் தத் சத் :-



ஓம்

# முக்கிய வினா விடைகள்

1. **நாம, ரூபமற்ற வஸ்துவுக்குப் பிரமமென்று நாமமேன் வந்தது?**

   சுவானுபவ மஹரிஷிகளாலிடப்பட்ட நாமமே தவிர யதார்த்தமாக அந்த நாமமுமற்றதாம்.

2. **மனோவாதனை எக்காலம் வரை அழியாது?**

   உண்மை ஞானம் வருமளவும்.

3. **உண்மை ஞானமெப்போது வரும்?**

   மனோ வாசனை நசிக்குங் காலத்தில்.

4. **மாயை யாரை வருத்தும்?**

   சுவானுபவமின்றியவரை.

5. **மாயை எப்படியிருக்கும்?**

   பிரஹ்மத்தைத் தவிர அன்னியமின்றியிருக்கும்.

6. **மாயா நாசமாவதென்ன?**

   மனோ நாசமே.

7. **ஆத்ம தரிசனத்துக்குபாயமி யாது?**

   சுருதி குருவாக்கியத் திலகத்தைச் செலுத்தலாம்.

8. **பேத பாவனை எப்போது நீங்கும்?**

   சின்மாத்திர தரிசனமானபோதே.

9. **மனம் விரியுங் காரணங்களெவை?**

   சரீரப்பற்று மிகுதலினாலும் தனதன்னிய அனாத்ம வஸ்துக் களைத் தானென்றெண்ணினாலும் மனைவி, புத்திரன்,

செல்வம் முதலிய அபிமானங்களாலும் அறியாமையினாலும் மனம் விரியும்.

10. **ஆத்ம சுகமெப்போது வரும்?**

ஜீவப் பிரஹ்ம ஐக்கிய காலத்தில்.

11. **மனத்துக்குருவமி யாது?**

நாமமத்திரமே.

12. **சமாதி அப்பியாச காலத்தில் ஒரு பிரகாசந் தோற்றுகிறதே அதென்ன?**

சமாதியின் பிரதிபந்தம் ஒன்பதுளொன்றான மனோ கற்பனை தான்.

13. **சமாதி அப்பியாச காலங்களில் ஒன்றுந் தோன்றாமலிருக்கிறதே அஃதென்ன?**

லயம், கஷாயம் இரண்டிலேதேனு மொன்றாகும்.

14. **பிரவிர்த்தி ஞானி, நிவிர்த்தி ஞானி இவர்களில் யாவர் மேல்?**

ஞான திருஷ்டியானா லிருவருஞ் சமமே.

15. **சமாதியாவதென்ன?**

மனோ சஞ்சலம் நீங்குவதே.

16. **தியானமென்ப தென்ன?**

வாதனையற்றிருப்பதே.

17. **ஆத்ம தரிசனமெப்போ துண்டாகும்?**

சர்வ சங்கற்பங்களும் நாசமாங்குங் காலத்தில்.

18. **துக்கம் யாருக்கில்லை?**

ஆத்ம போதமுடையோருக்கு.



19. **ஜனன வியாதிக்கு மருந்தெது?**

தத்துவ ஞானமே.

20. **நனவிற் சுழுத்தியாவ தென்ன?**

நிருவிகற்ப சமாதியாம்.

21. **சவிகற்ப சமாதியாவ தென்ன?**

காண்பான், காக்ஷி, காணப்படு பொருள் இம்மூன்றின் பிரதீதியோடு பிரஹ்ம தரிசனமாம்.

22. **நிருவிக்றப சமாதியாவது யாது?**

திருபுடித் தோற்றமற்ற பிரஹ்ம தரிசனமாம்.

23. **பிராண வாயு எச்சாதனங்களாற் றடைப்படும்?**

நிராசை நிறைந்த பிரஹ்ம தரிசனத்தினாலும் ஆத்மஞான சாஸ்திரங்களின் பயிற்சியோடு சாது சங்க வைராக்கிய முயற்சியாலும் ரேசக, பூரக, கும்பக பிராணாயாமத்தினாலும் ஓங்காரத்தின் தாத்பரிய நாட்டத்தினாலும் பிரமரந்திரத்தில் பிராணனையேற்றும், லம்பிகா யோகத்தினாலும் கேசரி முத்திரையினாலும், சாம்பவி முத்திரையினாலும், புருவ மத்தியான சுழுமுனையில் நிற்கின்ற பைரவி முத்திரையாலும் அவரவர்கள் ஆசிரியர் களருளிச் செய்த லக்ஷியத்தில் மனதை வைப்பதனாலும் பிராணனடங்குமாம்.

24. **மனதையடக்கு முபாயமி யாது?**

ஆத்மானாத்ம விசாரணையினாலும் அத்துவிதஞானத்தை அறிதலினாலும் நற்சாது சங்கத்தினாலும் துக்க ஏதுவான சர்வ வாதனைகளையு மகற்றி விடுவதாலும் பிராணாயாமத் தினாலும் மனதடங்குமாம்.

25. **ஆசாமயக்க நீங்குமுபாயமி யாது?**

குரு முகமாக மஹா வாக்கியார்த்தங்களை விசாரிக்கின் ஞானமுதய மாயம் மயக்க நீங்கும்.

26. **ஆசாரியர்களறிவினாற் சீடர்களுடைய அஞ்ஞானத்தை யகற்றலாமோ?**

வியேவிகளுக்கு அகற்றலாம்.

27. **சுக, துக்கமெப்போது நீங்கும்?**

திடாபரோக்ஷ ஞானமுதயமானவுடன்.

28. **பந்தமுக்தி யாருக்கு?**

அந்தக் கரணத்துக்கு.

29. **உலகம் நித்தியமா அனித்தியமா?**

நித்தியமுமல்ல! அனித்தியமுமல்ல!

30. **பாகிய சரியையாவ தென்ன?**

ஸ்தல யாத்திரை, தீர்த்த யாத்திரை, புஷ்பங் கட்டல், ஆலய மெழுகல், விளக்கிடல், சாதுக்களுக்கு சிசுருஷை செய்தல், விரதமனுஷ்டித்தல், குளங் கெல்லுதல் இவைகளின்னு மனேகமாம்.

31. **ஆந்தர சரியையாவ தென்ன?**

மனதைப் பஞ்சகோச விலக்ஷணப்படுத்தி, சூனியத் தன்மை யுந் தள்ளி இந்திரிய வழிவிடாமல் தடுத்து, ஆகாய போதத் துடனிருத்தல்.

32. **பாகிய கிரியையாவ தென்ன?**

புஷ்பம், ஜலம், இளநீர், பழங்கள், தேன், பால் இன்னும் பற்பல அபிஷேகங்களும் தூப, தீப, நைவேத்திய ஆராதனங் களும் சிவ, விஷ்ணு, கணேச பூஜா மார்க்கத்தை யனுஷ்டித்த லும் புலால் மறுத்தலும், கொல்லாமையும் கிரியையாம்.



33. **ஆந்தா கிரியையாவ தென்ன?**

அவ்வாகாச போதத்தில் மனதை நிறுத்தாமல் சாதக பாதக யுக்தியுடன் மஹா வாக்கிய அனுசந்தானஞ் செய்து கொண்டிருத்தலாம்.

34. **யோகமாவ தென்ன?**

அப்படி இடைவிடாதனு சந்திக்க வாக்கியம் நின்று மனதசை வின்றி ஏகாக்கிரத் தன்மையிலிருக்கும் அப்போது சுவாசம் தடைபடும். அதுவே யோகமாம்.

35. **ஞானமாவ தென்ன?**

சுத்த நிராமய நிர்க்குண வஸ்துவே தானான நிலையில் இருத்தல்.

36. **சாம்பவி முத்திரையாவ தென்ன?**

நாசியின் துவாதசாந்தத்தினந்தத்தில் உதயமாகும் விசுத்த சக்கரத்தில் மனதை நிறுத்துதல்.

37. **பைரவி முத்திரையாவ தென்ன?**

புருவ மத்தியான வியோம சக்கரத்தில் மனதை நிறுத்தலாம்.

38. **கேசரி முத்திரையாவ தென்ன?**

கபால ரந்திரத்தில் நாக்கும் பிரவேசிக்கச் சுழுமுனையில் மனதை நிறுத்தலாம்.

39. **ஞானிகள் கூறு முத்திரைகளின் லக்ஷணங்களெவை?**

பிரமந்திரத்தில் அந்தக்கரண விர்த்தியை நிறுத்தி அப்பியாசிக் கின்ற முடிவில் விளங்கும். குனிய வியாபக விளக்கமே சாம்பவி முத்திரையெனவும், இரண்டு சங்கற்பங்களுக்கு மத்தியில் மனதை நிறுத்தியிருத்தல் பைரவி முத்திரையென வும், சங்கற்ப உற்பத்தி ஸ்தானத்தில் பேதபாதக அபேத சாதக யுக்தியுடன் மஹா வாக்கியத்தை அனுசந்திக்கும்

விருத்தியானது சொரூபத்தோடே ஏகாக்கிரதையடைந்து சகல கேவலத்துக்கு மத்தியகதஸ்தமான ஸ்திதியைக் கேசரி முத்திரையெனவுங் கூறுவர்.

**40. ஞான நிஷ்டைக்குரிய ஆதனங்களெவை?**

பதுமமும், சித்தமுமாம்.

**41. நிஷ்டை செய்பவர்கள் எந்த முகமாக இருந்து செய்வது?**

வடக்கு முகமாக.

**42. இந்த நியமமவசியந் தானோ?**

அவசியமாகும்வரை அவசியந்தான்.

**43. இப்படி இதற்குப் பிரமாணமுண்டோ?**

உண்டு.

**44. எந்தச் சாஸ்திரத்தில்?**

ஞான வாசிட்டம், நிஷ்டானுபூதி முதலிய கிரந்தங்களில்.

**45. பஞ்சாக்ஷரத்தின் தாற்பரியமாவது யாது?**

சிவயநம என்னுமந்திரத்தில் நகார மகார அக்ஷரங்களை நீக்கிச் சிவய என்னுமக்ஷரத்தில் ய என்னு மக்ஷரத்தை அஹமெனப் பொருள் கொண்டு சிவ என்னு மக்ஷரத்தை பிரஹ்மமெனப் பொருள் கொண்டு பிரஹ்ம மஹம் அதாவது பிரஹ்மோ ஹம் எனத்தாற்பரியமாம்.

**46. பிரஹ்மார்ப்பணமென்ப தென்ன?**

சர்வ திரிசியங்களிலிச்சை நீக்குதலே.

**47. ஈஸ்வரார்ப்பணமாவ தென்ன?**

துவைத பாவனை நீங்கி அத்வைத பாவனையை அடைதலாம்.

**48. சமாதி கூடுவதற்கு சாதனங்க ளெவை?**

மனைவி, செல்வம், வீடு முதலியவற்றின் பற்றை விடுதலும், சுக, துக்கங்களைச் சமமாகப் பார்ப்பதனாலும் எப்போதுமே



ஏகாந்த ஸ்தலத்தை யடைதலினாலும் ஆத்ம சொரூபத்தில் நீங்காத நிஷ்டையும் சாதனமாம்.

**49. அஞ்ஞான மேனுண்டாயிற்று?**

விசாரணையில்லாததினால்.

**50. விசாரணை ஏனுண்டாகாது?**

அறியாமையினால்.

**51. வியாதியுண்டாகுங் காரணங்களெவை?**

பரஞானமற்றதனாலும், இந்திரிய நிக்கிரகஞ் செய்யச் சமர்த்தற்றதனாலும், அகத்திலாசையும் அகங்காரமுமுண்டாவதாலும், அசுப காரியங்களியற்றுவதனாலும், பொல்லாத உணவுகளினாலும், துஷ்டர்கள் கூட்டுறவினாலும், துராசையினாலும், கெட்ட நாடுகளில் வசிக்கிறதாலும் வியாதிகளுண்டாம்.

**52. ஆத்ம ஞானமில்லாதவர்கட்குக் கதியேது?**

கிரியையே.

**53. ஆத்ம விசாரமெதனாலுண்டாம்?**

சாது சங்கத்தால்.

**54. அஹம்பாவத்தைக் கெடுக்குமுபாயமி யாது?**

அஹந்தன்மையை விசாரித்தலால்.

**55. அகங்கார மெவ்விடத்துண்டாயிற்று?**

சூனியத்தில்.

**56. நான் என்பது எப்போது நாசமாம்?**

தான் என்பது நிறைந்தவுடன்.

57. பந்தமெது? முக்தி யெது?

இச்சையே பந்தம்; அதன் விடுதியே முக்தி.

58. அஷ்டமா சித்தியில் மயங்குபவர் யார்?

அவிவேகிகள்.

59. ஜீவர்கள் பிறந்ததற்குக் காரணமியாது?

கர்ம பந்தத்தினால்.

60. கர்மமெதனால் வந்தது?

பிறப்பினால்.

61. இதற்கவதி எது?

பிஜாங்குர நியாயமே அவதியாம்.

62. அவித்தையின் லக்ஷணமென்ன?

இல்லாததே லக்ஷணமாம்.

63. கர்மத் தியாகமாவது யாது?

நித்திய சுக போதமான பிரஹ்ம சொரூபமே தானாக விளங்குஞ் சுபாவனுபவமேயாம்.

64. ஆத்ம விசாரணை எதுவரை செய்ய வேண்டும்?

துரிய நிலையடையும் வரை.

65. குதர்க்கமாவதென்ன?

சுருதி யுக்திக்கு விரோதமான வார்த்தை.

66. கூடஸ்தன், ஜீவன், ஈஸ்வரன், உலகம், இவ்விதமாகத் தோற்றப்பட்ட வஸ்து எது?

பிரம்மமொன்றே.



67. ஏன் பேதமாகத் தோற்றுகிறது?

ஸ்வானுபவமில்லாததால்.

68. ஆத்மாவே உலகமாவதற்குக் காரணமென்ன?

ஆகவேண்டு மென்னுஞ் சங்கற்பமே காரணமாம்.

69. மித்தையான மனது ஏது செய்யும்? எப்போது நசிக்கும்?

சகத்தைக் காட்டிக் கொண்டிருந்து அத்தியந்தப் பிரளயத்தில் நசிக்கும்.

70. ஜீவன் முக்தனென்பவனியாவன்?

யாவையுங் கூடிக் கூடாமற் சித்தாயிருப்பவனாம்.

71. விதேக முக்தி யென்பதென்ன?

சர்வமும் பிரஹ்ம மயமான அபரோக்ஷ ஞானாத்ம சாக்ஷாத்காரமாய் விளங்குமனுபவமேயாம்.

72. பிரஹ்ம லக்ஷணமியாது?

அகம்பாவமற்றவிடத்தில் அகோசரமாய் விளங்குவதே லக்ஷணமாம்.

73. பிரஹ்மத்தையடைஞ் சாதகமியாது?

இந்திரிய முதலிய கரணங்களியாவரையு மகமுகப்படுத்தி யதனால் ஆனந்தமுதயமானவிடத்தில் திரிசியமில்லை யெனக் காண்பதே சாதகமாம்.

74. உலகத்திலுள்ள ஜீவர்களனைவரையும் வேறு வேறாகக் காண்பதற்குக் காரணமென்ன?

அவரவர் பாவனையே யதற்குக் காரணம்.

75. ஜீவனென்பவனியாவன்?

பிரஹ்மப் பிரகாச பேத ஞானமேயாம்.

118. **நேராக ஞானத்தைத் கொடுப்பதெது?**

மஹா வாக்கியமொன்றுதான்.

119. **பிரபஞ்சத்தை நீக்குமுபாயமியாது?**

சம திருஷ்டியினால்.

120. **சம திருஷ்டியாவதென்ன?**

எங்கும் பிரஹ்மமாக ஆவது.

121. **சகுணோபாசனை அவசியம் வேண்டுமோ?**

நிர்க்குணோபாசனை யின்றியவர்க்கு அவசியம் வேண்டும்.

122. **தியானத்திற்கும் உபாசனைக்கும் பேதமென்ன?**

தியானஞ் சிந்தித்தலும், உபாசனை வழிபடலுமாம்.

123. **சூரனென்பவனியாவன்?**

திருசியங்களை யகற்றித் திருக்குவையடைந்தவனேயாம்.

124. **உபசாந்தமடைந்தவன் லக்ஷணமென்ன?**

சத்துரு மித்துருக்களை ஒன்றாய்ப் பார்ப்பதே லக்ஷணமாம்.

125. **மேலான ஆனந்தத்திற்குத் தடையாயிருப்பதெது?**

சங்கற்ப விகற்ப ரூபமான மனதேயாம்.

126. **மனத்தை எவ்வுபாயத்தாற் கெடுக்கலாம்?**

சர்வ விடயங்களின் தோடதிருஷ்டியினால்.

127. **இதற்குப் பிரமாணமுண்டோ?**

சர்வ வேதாந்த சாஸ்திரங்களுமே பிரமாணமாம்.

128. **மனமிறந்ததற் கடையாளமென்ன?**

அனந்த சுக, துக்கங்கள் வந்தாலுமின்றியிருப்பதே அடையாளமாம்.



129. **மாயை யென்பதென்ன?**

பிரஹ்ம திருஷ்டி நீங்குவதே மாயையாம்.

130. **ஞானியின் மன லக்ஷணமென்ன?**

ஒன்றிலும் பற்றற்றுத் தன்மயமாய் விளங்குவதே லக்ஷணமாம்.

131. **மேலான மோக்ஷத்தையடைவதற்குரிய சமயமெது?**

சர்வ சமயங்களும் மோக்ஷமடைவதற்குரியதாம்.

132. **நாஸ்திக சமயமுங் கூடவா?**

அதுவுங் கூடத்தான்.

133. **அவனுக்கு எப்படி மோக்ஷமுண்டாகும்?**

அவனும் ஓர் காலத்தில் வருவான்.

134. **சமாதி அப்பியாசிக்கிறவர்களுக்கு உலக விஷய பிரவிருத்திகளில் நியமமுண்டோ?**

உண்டு. அதாவது, சரீர நிலைத்திருக்கும்படி செய்து கொள்ள வேண்டிய பிரவிருத்திகள் மாத்திரம் செய்யலாம். மற்ற விவகாரஞ் செய்தல் கூடாது.

135. **சமாதியில் மனது எப்படியிருக்கும்?**

சமுத்திர ஜலத்தில் உப்புக் கரைந்து ஜலமயமாவதுபோல மனது பிரஹ்மத்தில் கரைந்து பிரஹ்ம மயமாகவே யிருக்கும்.

136. **சர்வ சாஸ்திரங்களினபிப்பிராயமென்ன?**

பிரஹ்ம சாக்ஷாத்காரத்தை அடைதலேயாம்.

-: ஓம் தத் சத் :-

ஓம்

# சிஷ்யன் சமாதியி லமர்தல்

முற்கூறிய பலவித சுருதி சம்மதமான சங்கைகளுக்கும் சமாதான முடிந்தபின் ஆசாரியர் சிஷ்யனைச் சமீபத்திலழைத்து, "மைந்தா! உன்னுடைய அந்தக்கரணத்திலுள்ள சர்வ சந்தேகங் களும் நீங்கி விட்டனவா? இன்னுமிருக்கின்றதா?" என வினவச் சிஷ்யனும், "எனது அபார கருணாகரக்கடலாகிய என்னப்பனே! என்னுடைய மனதில் இனிச் சுருதி விஷயமான சங்கையும் யுக்தி விஷயமான சங்கையும் கிடையாது. ஆனால், எனது மனம் பிரஹ்மமயமாக வேண்டிய சங்கை ஒன்றுதானிருக்கிறது" என்றுரைக்க, ஆசாரியரும் அஸ்த மஸ்த கசையோகஞ் செய்து பிரஹ்ம தீக்ஷை செய்வித்துத் தான் தக்ஷிணாமூர்த்த வடிவங் கொண்டு சிஷ்யனுடைய மனதைப் பஞ்சகோச விலக்ஷணமாக்கி அதன் வாதனாவடிவ சூனியத்தையுமகற்றிக் கூடஸ்த விருத்தியையுந் தள்ளி மஹாவாக்கிய உபதேசஞ் செய்து நிருவிகற்ப சமாதியிற் சிஷ்யனை அமர்த்தினர். சிஷ்யனும் சர்வசங்க பரித்தியாக ரூபமான நிருவிகற்ப சமாதியலமர்ந்து விட்டனன். இவ்விதமாக இந்நூல் முற்றுப் பெற்றது.

-: ஓம் தத் சத் :-

### பிரஹ்மார்ப்பணம்

நிருவிகற்ப நிலைத்தவர் நித்திய
வருவிகற்ப வகமற வாழிய
உருவையுற்ற வுயரவ ருண்ணிலை
பெருவ பெற்றுறும் பேரவர் வாழியே.

-: ஓம் தத் சத் :-

# ஸ்ரீ விலக்ஷணானந்தர்

(1894-1945)

ஆண்டவன் ஆண், பெண் பேதங் கடந்த, துரிய துரியாதீதத்து உச்சியில் விளங்கும் ஜோதிமயமான பரம்பொருளே என்றும், அவரை ஜாதி வேறுபாடின்றி அனைவரும் அறிந்து இன்பமாய் வாழ முடியு மென்றும் கூறி, தன்னை நாடி வந்தோர்க்கெல்லாம் ஏழை, பணக்காரர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற எந்த வேறுபாடுமின்றி ஸ்ரீ வெங்கடேஸ்வர மூல மந்திரத்தை உபதேசித்தருளிய வள்ளல் பெருந்தகை ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகள்.

தமிழகத்தின் தென் பகுதியிலுள்ள மதுரை மாவட்டம், தேவாரம் என்ற நகரில் 1894-ல் அவதரித்தார். சிறு வயதிலேயே அருகிலுள்ள மலைகளிலும், சுருளிமலையிலுமுள்ள சித்தர்களோடு சுற்றித் திரிந்தார். வயது வந்த பின் வடநாடு சென்று பல யோகிகளைக் கண்டு அவர் களுடன் சில காலம் இருந்து வந்தார். பிறகு, திருமலை வந்து அங்குள்ள மலைக் குகைகளில் தவம் செய்து கொண்டு, இடை யிடையே தமிழகமெங்கும் பிரயாணம் செய்து, மக்களுக்கு அரிய ஆன்மீக விஷயங்களைப் போதித்தருளினார். தன் தவத்தால் பெற்ற சக்தியால் வசதியற்ற பல ஏழை மக்கள் நல்வாழ்வு பெற அருள் புரிந்தார். வியாதிஸ்தர்கள், துர்த்தேவதைகளால் பீடிக்கப்பட்டோர், மன நலம் குன்றியோர் பலரும் அவரது அருட்பார்வையினால் குண மடைந்தனர். விரும்பிச் செய்யாவிடினும் பல சமயங்களில் அவரது சித்துக்கள் வெளிப்பட்டு, பலரது குறைகள் தீர்க்கப்பட்டன.

தமிழகத்தின் பல ஊர்களில் அங்குள்ளோர் கேட்டுக் கொண்டதற் கிணங்க ஞான வாசிஷ்டம், கைவல்யம் ஆகியவை பாடமாகவும், பல அரிய ஆன்மீக விஷயங்களை சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வண்ணம், எளிய முறையில் பிரசங்கமாகவும் நடத்தியுள்ளார். அவர் பேசியவையும், பாடியவையும் 700க்கும் மேற்பட்ட வெளியீடுகளாக வந்துள்ளன. தனக்கென எந்தவொரு கட்டடமோ, அமைப்போ ஏற்படுத்திக் கொள்ளாமலே தமிழகமெங்கும் சுற்றித் திரிந்து அருட்செயல்கள் பல புரிந்த சித்த புருஷர் 1945ம் ஆண்டு சமாதியடைந்தார்.

வாழ்க்கை முழுதும் உலகோர்க்கு உதவும் குறிக்கோளோடு வாழ்ந்த ஸ்வாமிகள் காட்பாடி அருகிலுள்ள மேல்மாயில் கிராமத்தில் சமாதிக் கோயில் கொண்டு, இன்றும் அங்கு தன்னை நாடி வருவோர் துயர் தீர்த்து, வழிகாட்டி, நல்வாழ்வு வாழ அருள்புரிந்து வருகிறார். ஆன்மீகப் பயிற்சி செய்வோர் அவரது சமாதியருகே அமர்ந்து தியானம் செய்யும்போது ஸ்வாமிகளின் ஆன்மீக அலைகளை அறிந்து உயர்ந்த நிலையில் நிற்க முடிவதை அறிகிறார்கள். இப்படியாக அவரை நாடி வந்தோர்க்கெல்லாம் வேண்டியதைக் கொடுத்து மன அமைதியுடன் வாழ அருள்புரிந்து வருகிறார்.

திருப்பதி மலையிலே தவம் செய்த காலத்தில் ஸ்ரீ வேங்கடேஸ்வரப் பெருமான் தரிசனம் பெற்று, அவரையே தன் உபாசனா மூர்த்தியாகக் கொண்டு, அவரை தினமும் வழிபட ஏதுவாக ஸ்ரீ வேங்கடேஸ்வர அதர்வசீர்ஷக் கவசம் என்ற ஒரு பெரிய பொக்கிஷத்தை உபநிஷதங்களிலிருந்து எடுத்துக் கொடுத்துள்ளார்கள். மேலும் மற்ற தெய்வங்களையும் வழிபடுவதற்கு ஏதுவாக எளிய தமிழில் பாடல்களாக பல சிறு சிறு நூல்களை அருளியுள்ளார்கள்.

செல்வமும், பேரும் புகழும் விரும்பாத சில அன்பர்கள் ஸ்வாமிகளின் அருளாசியினால் அவருக்கு மேல்மாயில் சமாதிக் கோயிலில் நித்திய பூஜையும், ஆண்டுதோறும் குரு பூஜையும், ஜெயந்தி பூஜையும் நடத்தி வருகிறார்கள். சென்னையிலும் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. சத்தியத்தின் சத்தியமாகிய சமத்துவத்தின் மெய்ஞ்ஞான அருட் கடாக்ஷத்தை அங்கமர்ந்து, உள்ளமுருகி தியானிப்போரின் பிரச்னைகளைத் தீர்க்கும்படியான மகாசக்தி வாய்ந்த மகிமையை அங்கு காணலாம். அதுவுமில்லாத இந்த விஞ்ஞான காலத்திலே அருள்ஞான சக்தியை அளவிலாது அள்ளி அருளும் ஆத்மாவின் அந்தரங்கமான ஆத்ம ஜோதியின் பரிபூரணானந்த நிலையை அதுதான் வேண்டுமென்று கோருவோர் அங்கு பெற்று வருகிறார்கள்.

இப்படி நம்முடைய அல்லல்கள் நீங்கி, மனம் ஆனந்தமுடம், அமைதியும் பெற்று, உடல் ஆரோக்யத்துடன் இவ்வுலகில் நல்வாழ்வு வாழ ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகளின் அருளை நாடிப் பெற்றுய்யுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.